
# தென்மொழி

## அதர்ந்தெழுவாய்!

மொழிக்கலப்பும் இனஇழிவும் பண்பாட்டு வீழ்வும்
முழுஅடிமை அரசியலும் பொருளியலும் உன்னை
விழிக்கவிலா உறக்கத்தில் ஆழ்த்தியடி வீழ்த்தி,
விலங்குகளாய்ச் சமைந்தனகாண்! உணர்கிலையே! தமிழா!
பழிக்கொருவ னாகினையே! விழிக்கிலையே இன்னும்!
பகையுணர்ந்தே நின்தடந்தோள் திமிர்ந்தெழுவா யானால்,
அழிக்கலுறும் பெரும்பகையும் தூள்தூள் ஆ காதோ?
அதர்ந்தெழுவாய், இமைதிறந்தே! அடலேறே! களிறே!

சுவடி : 12. ஓலை : 8.




ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

விலை:
ஓர் உருபா.

# நமக்கு வந்த மடல்கள்.

**0 : 457 :** தென்மொழி ஆசிரியர்க்கு, கடந்த மூன்று இதழ்களாகத் தொடர்ந்துவரும் ஆசிரியவுரையினைப் படித்தோம். படிக்கப் படிக்கச் சிரிப்புத்தான் வந்தது. பல இடங்களில் நன்றாக வாய்விட்டுச் சிரிக்க முடிந்தது. பலரிடத்திலும் படித்துக் காட்டினோம். எல்லாரும் சிரித்து மகிழ்ந்தனர். தென்மொழியை இவ்வளவு நல்ல நகைச்சுவை இதழாக மாற்றியமைக்குப் பாராட்டுக்கள். பொதுவுணர்வாளனின் "பொருள் நசை"க்குக் கொடுத்துள்ள விளக்கம், அடடா, மிக மிக அருமை. இதுவரை எந்த மெய்யறிவாளனும் இவ்வளவு சிரிக்கும்படி விளக்கம் சொன்னதில்லை. பொருள் நசை உடையவன் பொதுநலமுடையவன் ஆக முடியுமா ?

அடுத்து, ஆரவாரத்தை விரும்பாமல் போலிகளைக் (எல்லோரையுமன்று) கண்ணெடுத்துக் கூடப்பார்க்க விரும்பாமல் அமைதியாக வாழ்பவனுக்குக் கொடுக்கப்படும் விளக்கம் இருக்கிறதே, — அடடா, அடடா, எவ்வளவு அரிய கண்டுபிடிப்பு; எவ்வளவு நுண்ணிய ஆராய்ச்சி ! "மெய்யறிவு" என்னமாய் விளையாடுகிறது ! அமைதியாக இருப்பவர்கள் எல்லாம் ஏதோ குற்றம் செய்தவர்களாகத்தான் இருக்கவேண்டும். இராமலிங்க அடிகள் கூடப் புகழ்க்காழ்ப்பில் புழுங்கியிருந்ததால்தான் மற்றவரை (ஒரு சிலரை) ஏறெடுத்துக்கூடப் பார்க்க விருப்பமில்லாதவராக இருந்திருக்கிறார். அப்படித்தானே ! "மெய்யறிவு" எதற்கெல்லாம் பயன்படுகிறது ! உண்மையிலேயே மெய்யறிவுத் துறையில் இது ஒரு பெரும் புரட்சிதான் !

எவனாவது ஏமாறியவன் (புதிதாக) கிடைத்தால், அவன் தலையைத் தடவி இந்த உளறல்களையெல்லாம் நூலாக வெளியிடுவது தானே ! உலகமே கண்டு சிரிக்கவும், நம்மைப்பற்றித் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுமன்றோ ! —ம. இலெ. தங்கப்பா.

*குறிப்பு : இதைத் தென்மொழியில் வெளியிடத் தேவையில்லை. வெளியிடுவதற்காக இதை எழுதவில்லை. ஆனால், வெளியிட்டால் வழக்கமாகச் செய்யும் வெட்டு, ஒட்டு, திருட்டு வேலைகளைச் செய்யாமல், இந்தக் குறிப்பு உட்பட முழுமையாக வெளியிடல் வேண்டும். மடலுக்கு என்னிடம் படி உள்ளது.*

*(ஆசிரியர் குறிப்பு : இம் மிகச்சிறந்த (!) மடலை முழுமையாக வெளியிட்டுள்ளேன். படியோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்க. இப்பொழுது மனநிறைவுதானே ! — ஆ-ர்.)*

**0 : 458 :** தமிழ் நலஞ்சான்ற ஐயா ! வணக்கம். தென்மொழி இதழைக் கிழமைதோறும் புதிதாகக் காணவில்லையே என ஏக்கமிடுகிறேன். ஒரு திங்களுக்கொன்று வருவதே பெரும்பாடாயிருக்க நாடோறும் பொத்தக விற்பனைக் கடையில் இதழின் வருகையைக் கேட்டறிந்து திரும்புகிறேன்.............ஐயா, கடந்த ஆறேழு திங்க

—[அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க]

# வானொலியே! வானொலியே!

(அனைத்து இந்திய வானொலி சென்னை, நிலைய இயக்குநர்க்கு விடுத்த மடலின்படி)

பொருள்: ஒலி பரப்பில் தரக்குறைவு—பற்றி—கடிந்துரை.

ஐயா, 9-6-75 அன்று இளைய பாரத நிகழ்ச்சிப் பிரிவான 'நேயர் நேரம்' கேட்க நேர்ந்தது. அந்நிகழ்ச்சியை திருவாட்டி கி.ரிசா தொகுத்து அளித்ததாக அறிவிக்கப்பட்டது.

இருட்டு வீட்டில் நுழைந்த திருடன் வீட்டார் அரவம் கேட்டு, எதிர்ப்படுவதை எல்லாம் உருட்டி விரைவு விரைவாக அகப்படுவதைச் சுருட்டிக்கொண்டு ஓடுவதைப் போல், திருவாட்டி கிரிசா அவர்கள் வாயில் அகப்பட்ட சொற்களையெல்லாம் உருட்டி விரைவு விரை வாகப் பேசி முடித்த தரக் குறைவைப்பற்றி நாங்கள் பெரிதுபடுத்த விரும்பவில்லை. ஆனால், அவர்களுடைய தாழ்வான, தரக்குறைவான, தமிழ் ஒலிப்பு எங்களைப்பெரிதும் புண்படுத்திவிட்டது. அழகான ஆங்கிலப் பலுக்கல் (உச்சரிப்பு) கேட்க வேண்டுமானால் இன்றைக் கும் உலகத்தார் பி.பி.சியைத் திருப்புகிறார்கள். பி. பி. சி. நிறுவனம் ஆங்கிலேய நாட்டில் இருக்கிறது. ஆங்கிலேயர் பணத்தில் நடத்தப் பெறுகிறது. ஆங்கிலத்தரம் காக்கப்படுகிறது, ஆனால் திருச்சி வானொலி நிலையம் தமிழ்நாட்டில் இருந்தாலும், தமிழர்கள் பணத்தில் நடந்தாலும் தமிழில் நிகழ்ச்சிகள் சரிவர நடப்பதில்லை. அப்படியே நடந்தாலும் தரமாக இருப்பது இல்லை, தரக்குறைவோடுகூட, தமிழை அழிப்பதிலும் தமிழ் உணர்வை மிதிப்பதிலும் முனைந்து நிற்கிறது. இதற்குக் கரணியம் என்ன?

எண்ணிப் பார்க்கிறோம்; இழையோடும் எண்ணங்களை உங்கள் பார்வைக்கு வைக்கிறோம். வானொலித்துறையைப் பொருத்தமட்டில் தமிழ் ஒரு வாணிகச் சரக்காகத்தான் இருக்க வேண்டும். அதனால் தான் தமிழ் ஒலிபரப்பை எந்தத்தகுதியும்,திறமையும் தேவையில்லாத ஒரு தொழில் என்று வானொலித்துறை கருதித் தமிழ்ப் பலுக்கலுக்கு நேர் எதிரியாக திருவாட்டி கிரிசாவை ஒலி பரப்பிற்கு அமர்த்தியிருக் கிறார்கள் போலும்! (அல்லது) ஏதிலி(அனாதை)ப் பெண்களுக்கு அடைக்கலம் (அபயம்) அளிக்கவேண்டுமே என்ற நோக்கோடு இழிந்த (!) (கேவலம்) தமிழ் ஒலிபரப்புத் தானே என்று கருதி அந்தத் திருப்பணியில் அந்தக் கிரிசா போன்றவர்களை அமர்த்தியிருக் கிறார்கள் போலும்! (அல்லது) "எந்த மொழி எக்கேடு கெட்டால் என்ன?" எவன் "நாக்கைப் பிடுங்கிக்கொண்டு செத்தால் நமக் கென்ன?" என்று ஓர் இழிந்த வஞ்சகக்கூட்டம் தன்னுடைய குஞ்சு குளுவான்களோடு அனைத்து இந்திய வானொலியை ஒரே குத்தகை யாகவோ, நிலைத்த வன்கவர்பு (ஆக்கிரமிப்பு) ஆகவோ செய்து கொண்டு இருக்கவேண்டும். இப்படிப்பட்ட கணிப்புகளாக உள்ளவற் றில் எஃது உண்மையான காரணமென்று தொடர்புடையார் அனை வருக்கும் தெரியும். குறிப்பாக முத்தமிழையும் நான்தான் முனைந்து நின்று காக்கிறேன் என்று நாளும் நாப்பறை கொட்டித் திரியும் திரு வாளர் கி. ஆ. பெ. விசுவநாதம் போன்றவர்களுக்கும் தெரியும்.

"தமிழைக் காப்பது நாங்க !", "தமிழை வளர்ப்பது நாங்க !", "தமிழர் என்பவர் நாங்க !", "தமிழ் நாட்டை ஆள்வதும் நாங்க !" என்று மணி தவருமல், மேடை தவருமல் மாரடித்து அலையும் ஒரு கூட்டத்தார்க்கும் தெரியும். சிதறிய நெல்லிக் கனிகள் போல, அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் உண்மைத் தமிழ் அன்பர் ஒரு சிலருக்குத் தெரியும், நிலை இப்படி இருந்தும்கூட கிரிசாக்கள் தமிழ் நாட்டு வானொலியை அவர்கள் வாய்க்கு வந்த வண்ணம் ஆள்வதேன் ? (அழுது தொலைப்பதேன் ?)

முன்னர் சொன்ன மதிப்புக்குரிய தமிழர் தலைவர் எப்போதும் அடுத்துச் சொல்லப்பட்ட தமிழ் ஆர்ப்பரிப்பாளரும், வெறும் பேச்சினையே முதலீடாகக் கொண்டு, கோபுரப்புகழ் ஈட்டிக்கு வட்டளவு பொருளீட்டி வெட்ட வெளிச்சம் போட்டு வாழ்வதையே வாழ்க்கைப் போக்காகக் கொண்டுவிட்டனர்: அடுத்துச் சொல்லப்பட்ட நெல்லிக் கனித்தமிழர்களை ஒன்ருய்க் கட்டுவதற்குத் தமிழர் தலைவன் எவனும் இல்லை. எனவே நாங்கள் தமிழ் நாட்டில் தமிழர் பணத்தில் நடத்தப் பெறுகிற தமிழ் ஒலிபரப்பைத்தரமான முறையில் நடத்துங்கள் என்று வேண்ட விரும்பவில்லை, தரத்தைக் காத்திட, தரம் பகடி (கேலி)க்குள்ளாகும்போது மானம் காத்திட, வேட்டு கொண்டு வீணர் கூட்டத்தை வேரோடு அழிக்கின்ற வீரத் தமிழர் கூட்டம் உருவாகும் வரையில் கிரிசாக்கள் பெருகட்டும், கூடவே வனசாக்கள் வரட்டும். "அவர்கள் வாழ்க !"

இவண்,

1. பொறியாளர்: பா. கிருட்டிணசாமி, அறி. இ.
2. வணிகர். சு: முருகன், க. இ.
3. வணிகர், மீ. சிவகுமார், க. இ.,

(தமிழர் நல்வாழ்வு மன்றம், சீர்காழி.)

படி அனுப்பப்பெற்ருேர் :

1. துணை இயக்குநர், திருச்சி வானொலி நிலயம். திருச்சி,
2. திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருச்சி,
3. தென்மொழி, திங்கள் இதழ், சென்னை-5.
4. நவசக்தி, நாளிதழ், சென்னை.
5. துக்ளக், திங்கள் இருமுறை இதழ், சென்னை.
6. முதலமைச்சர் கருணுநிதி, சென்னை.
7. எல். கணேசன், இந்தி எதிர்ப்புப்புலி, மாணவர் அணிச் செயலர், சட்டமன்ற விடுதி, சென்னை.
8. செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர், செங்கோட்டை. தில்லி.

" கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை " எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!




# தென்மொழி

இலக்கிய இதழ்

[நிறுவனம் தி.பி: 1990 (1959)]

சுவடி: 12, ஓலை: 8.

விடை.-ஆடவை-தி. பி. ௨௦௦௬-சூலை.-'1975.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.


## ஆம், சூலை 13—விடுதலை மாநாடு!

# சென்னைக்கு வாருங்கள்!

சூழ்நிலைகள் நிகழ்ச்சிகளுக்கு உயிரூட்டுகின்றன!
நிகழ்ச்சிகள் சூழ்நிலைகளுக்குப் பெருமை தருகின்றன!
தில்லிப் பேரரசு இந்தியக் குடிமக்களின் அடிப்படை
உரிமைகளுக்கு விலங்குகள் பூட்டியுள்ள நேரம் இது!
எங்கு—எந்தப் பொழுதில் உரிமைகள் தடுக்கப்
படுகின்றனவோ, அது—அந்தப் பொழுதுதான்
அவ்வுரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய
சரியான இடம்—பொருத்தமான நேரம்!
மற்ற இடங்களில்—நேரங்களில்—உரிமைகள்
கேட்கப் பெறுவதற்குச் சரியான மதிப்பும் இல்லை!
அதற்கான தேவையும் இல்லை.

உரிமைகள் தரப்பெறுவதில்லை! அப்படித் தரப்பெறும்
உரிமைகளுக்கு உயிரூட்டமும் இருப்பதில்லை!
உரிமைகள் வலுக்கட்டாயமாக எடுத்துக்கொள்ளப்
பெறவேண்டியவை! அப்பொழுதுதான் அவை
மதிக்கப்பெறும்; காக்கப்பெறும்; மாந்தனின் இயற்கை
வளர்ச்சிக்கேற்ற துணையாகக் கருதப் பெறும்!
தரப்பெற்ற உரிமைகள் தாமே விளைந்த புல்லரிசிகள்!
எடுத்துக் கொள்ளப்பெற்ற உரிமைகள் வெயிலொடு,
புயலொடு போராடி விளைவித்த நெல்லரிசிகள்!

உரிமைகள் பெறுவதில் மூன்று நிலைகள்!
ஒன்று, கொடுக்கப்பெறும் உரிமைகள்!
இரண்டு, கேட்கப்பெறும் உரிமைகள்!
மூன்று, மீட்கப் பெறும் உரிமைகள்!
முன்னது, பிஞ்சு! துவர்ப்பது!—பசியற்ற ஒருவனுக்கு

இடப்பெறும் நல்விருந்து போன்றது! பருவமில்லாத
ஒருவனுக்குச் செய்து வைத்த திருமணம், அது!

அடுத்தது, காய்! புளிப்பது!—பசிக்கின்ற ஒருவனுக்குக்
கொடுக்கப் பெறும் பற்றாத பழங்கஞ்சி போன்றது!
இளைஞன் கைக்கு எட்டாமல்
நிற்கின்ற எழிலார்ந்த கன்னிப்பெண், அது!

மூன்றாவது, பழம்!—பட்டினி கிடப்பவன் பறித்து
உண்ணும் பாலமிழ்து போன்றது; பாய்ச்சல் கொண்ட
புலியை வெற்றிகொண்டு, தன் தாயை அதன்
பிடியிலிருந்து மீட்கும் வீர விளையாட்டு, அது!

முதலது, ஆங்கிலேயர் தில்லிக்கு வழங்கிய குடியரசுரிமை!
பின்னது தில்லி, தமிழர்க்கு வழங்கிய வாழ்வுரிமை!
இறுதியது, தமிழர்கள் தமக்குள்ள தாய் நிலத்தைத் தாமே
மீட்டுக்கொள்ளப் போராடும் விடுதலை உரிமை!

ஆம்! உரிமை நாட்டியம் ஒடுக்கப்பெற்று, நெருக்கடி
நிலைகள் தாண்டவமாடும் இந்நேரத்தில்தான்,
தென்மொழி தொடங்கிய உரிமைப் போரின் மூன்றாவது
போர்ராட்டக்களம் அமைக்கப் பெற்றுள்ளது!

**அமைக்கப்பெற்றுள்ள இடம் சென்னை! நாள் சூலை 13.**

உரிமைத் தடை கோழைகளுக்கு அச்சமூட்டும் அரிமா முழக்கம்!
ஆனால், அதுவே மறவர்களுக்கு வீர மூட்டும் யானைப்பிளிறல்!
விடுதலைப் போராட்ட மறவர்களின் வீர முழக்கங்கள்
சென்னைத் தெருக்களில் முழங்கும் நாள் அது!

வீறுகொண்ட வேங்கைகள் வெற்றி கொள்ளப்
புறப்படும் உரிமைப் போர் வரலாற்றின் உணர்ச்சி வரிகளைச்
சமைக்கப் போகும் நாள் அது!

விடுதலையணிகள் பல இணைந்து தலைகொடுக்கப்
புறப்பட்டுள்ளன!

**முரசொலி அடியார்—தோளோடு தோளிணைவார்!**

முழங்குகின்ற பேரொலியில் அவரின்
தேரொலியும கலந்து வரும்!
அறிக்கைகள்-சுவரொட்டிகள் தனியே அனுப்பப் பெறுகின்றன!

காத்துக் கிடந்த பாசறை மறவர்களே!
யாத்திடப் போகும் விடுதலைப் பரணிக்குக்
கோத்திடப் போகும் கூர் மழுங்காச் சொற்களாக

வந்து சேருங்கள் சென்னைக்கு!

சூலை 13.

ஆம், அன்று தமிழக விடுதலைப் போராட்ட நாள்!

—பெருஞ்சித்திரன்.

தமிழ் நிலத்தை விடுவிப்போம் !

# 3 ஆவது
# தமிழகப் பிரிவினை மாநாடு.

## ஜூலை 13-இல் சென்னையில்.

## பைந்தமிழ் மறவர்களே ! புறப்படுங்கள் சென்னைக்கு !

*தமிழன், மொழியால் ஆரியத்திற்கும், இனத்தால் ஆரியப் பார்ப்பனியத்திற்கும், ஆட்சியால் வடவர்க்கும், பொருளியலால் வடநாட்டு முதலாளியத்திற்கும், பண்பாட்டால் மேலை நாட்டினர்க்கும் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே படிப்படியாய் அடிமைப் பட்டுத் தாழ்ந்திழிந்து போனான், உலகின் முதல் மாந்தனும் மக்கள் குலத்திற்கே நாகரிகம் பரப்பியவனுமாகிய அவன், இன்று உலகின் கடைகெட்ட கீழ்மகனாய்த்தன் மானம் இழந்து, தன்னுணர்வு கெட்டுக்கூனிக் குறுகிக் கோழையாய்க்கிடந்து புழுவாய் நெளிகின்றான், இது மறுக்க முடியாத கடந்தகால, இக்கால வரலாற்றுண்மை.*

*அவன் இன்று கொஞ்சங் கொஞ்சமாய் உணர்வு வரப்பெற்றுக் கண்கள் விழிப்புற்று, எழுந்து, விரைந்தோடும் முன்னேற்ற உலகின் ஓட்ட நடையோடு தளர்நடையிட்டுப் போகப் புறப்பட்டுவிட்டான். துவண்டு கிடந்த அவன் உடல் நரம்புகள் புடைக்கத் தொடங்கி விட்டன. தொய்ந்து கிடந்த அவன் தோள்கள் வீறுபெற்று வருகின்றன. புதைந்து கிடந்த அவன் அரிமா நெஞ்சு, அதர்ந்து பொருத அணியமாகி விட்டது.*

இனியும் அவன் அடிமையாய் வாழ விரும்பவில்லை. இழி பிறவியாய், என்றென்றும் சூத்திரனாய் வாழ்ந்துவந்த அவன் இனிமேலும் பிராமணீயத்திற்குக் கீழ்ப்பட்டவனாய், வடவராளு

மையின் கீழ் வல்லடிமைப் பட்டவனாய் வாழ விரும்பவில்லை. எல்லாத் தளைகளினின்றும், எல்லா அடிமைப்போக்கினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளத் தீர்மானித்து விட்டான், எப்பாடு பட்டேனும் இவ் விருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள், உலகின் உரிமைபெற்ற ஒருவனாய்த் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளத் தொடங்கிவிட்டான்,

அவனின் அத்தகைய முருகிய முனைப்பால் பல கட்டுகள் ஒவ்வொன்றாய்த் தெறிக்கத் தொடங்கிவிட்டன. அவன் கை விலங்குகளும், கால் விலங்குகளும் ஒவ்வொன்றாய் உடைபடத் தொடங்கி விட்டன. இனி, அவனை உலகின் எந்த ஆற்றலாலும் தடுத்து நிறுத்தி விடமுடியாது: எந்த வல்லரசாலும் அவனை மீண்டும் அடிமைக் கூட்டுக்குள் தள்ளிவிட முடியாது, அவன் இனி அரசால் தனியன்; உறவால் இனியன்; தண்டமிழ் நாடு அவனுடையது; உரிமைக் கொடி அவன் ஆளுமைக் கோட்டத்தில் பறக்கத் தொடங்கி விட்டது,

கடந்த காலத்தில் அவன் தன் உரிமை முழக்கத்தைத் தில்லியின் இரும்புக் கதவுகளும் பிளக்கும் வண்ணம் வானதிர முழக்கிக்காட்டினான்; 1972-இல் திருச்சியில் முதல் விடுதலை மாநாடு [தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு] நடந்தது: 1973-இல் மதுரையில் தன்னுரிமைத் தந்தை பெரியார் துணையுடன் 2-ஆவது மாநாடு நடத்தத் திட்டமிடப்பெற்று முயற்சிகள் நடந்தன, ஆனால் அரசின் அதிகார வல்லாண்மையால் மாநாட்டு முன்னணியாளர்கள் பதினொருவர் நடந்துகொண்டிருந்த ஊர்வலத்திலேயே வளைத்துச் சிறைப்பிடிக்கப் பெற்று, முயற்சிகள் முறியடிக்கப்பெற்றன:

வகுக்கப்பெற்ற வரலாற்று விடுதலைப் போராட்டக் கொள்கைத் திட்டப்படி, அம்முயற்சிகளின் தொடர்ச்சியாக, இக்கால் அதன் 3-ஆவது தமிழகப் பிரிவினை மாநாடு வரும் சூலை 13-ஆம் நாள் தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் நடத்தத் திட்டமிடப் பெற்றுள்ளது:

மாநாடு அன்று மாலை 6 மணியளவில் சென்னைக் கடற்கரையில் அறிஞர் அண்ணாவின் அடக்க மேடைக்கும் பாவேந்தர் பாரதிதாசன் சிலைக்கும் இடையில் உள்ள மணல் வெளியில் நடத்தப் பெறும், அதற்கு முன் அன்று காலை 6 மணியிலிருந்து மாநகரின்

பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல விடுதலை அணிகள் புறப்பட்டு வீறு தெறிக்கும் இடி முழக்கங்களுடன், ஆரவாரமிக்க சாலைகளின் வழியாகப் பகல் 12 மணியளவில் அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலை வழியாகப் பெரியார் சிலைக் கருகில் ஒன்றுகூடிக் கொள்கை முழக்கத்துடன் மாநாட்டு மணல் திடல் நோக்கிச்சென்று முடிவெடுத்துக களையும்,

அன்று மாலை நடைபெறும் விடுதலை மாநாட்டுக் கூட்டத்தில் மாநாட்டு அமைப்பாளர் பெருஞ்சித்திரனாரும், முரசொலி அடியாரும் வேறு சில அரசியல் கட்சி விடுதலை வேங்கைகளும் கொள்கைகள் முழக்குவர். இறுதியில் மாநாட்டின் ஒரே தீர்மானத்துடனும், அடுத்த திட்ட அறிவிப்புடனும் மாநாடு முடிவுறும்.

எனவே.

தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க அவ் விடுதலை மாநாட்டில் கலந்துகொள்ள விரும்பும்,

அரிமா மறவர்களும்,
விடுதலைக் களிறுகளும்,
கொள்கைக் கோளரிகளும்,
வல்லுணர்வு வேங்கைகளும்,
இன்றே, தலைநகரை நோக்கிப் புறப்பட அணியமாகட்டும்!
அடுத்த தலைமுறைக்கு உரிமைப் பட்டயம் தீட்டட்டும்!
எழுச்சிபெறும் எரி முழக்க நாள் சூலை 13.
இடம், சென்னைக் கடற்கரை!
மாநாட்டை மறவாதீர்கள்! பிற தொடர்புகளை மறவுங்கள்!!
புறப்படுங்கள் தலைநகரை நோக்கி!!!

**முரசொலி அடியார்,**
மாநாட்டு நெறியாளர்.

**பெருஞ்சித்திரனார்,**
மாநாட்டு அமைப்பாளர்.

வரவேற்புக் குழுத் தலைவர் :

**நித்தலின்பனார்.**

மாநாட்டுச் செயலாளர்கள் :


அரிமா மகிழ்கோ.          நா. இளமாறன்.

மாநாட்டுப் பொருளாளர் :

ப. அடியார்க்கருளி.

வரவேற்புக் குழு உறுப்பினர்கள் :

1, ப. முருகவேள்,
2. மா. கதிர்ச்சிவன்,
3, அரங்கத் தமிழ்மணி,
4, பொற்செழியன்.
5. ந. வை. இளஞ்செழியன்,
6, கலியபெருமாள்,
7. கந்தக் கண்ணன்,
8, பாவை நடவரசன்,



ஆகவே தமிழனே! அழைக்கின் றேன், உனை!
சாகவே என்னினும், விடுதலைச் சாவே!
இன்றைத் தமிழகம் அடிமைவிட் டெழுந்தால்
பின்றைத் தமிழகம் பெரும்பயன் எய்தும்!
உன்னை விடுதலைக் கொப்புவித் திடுக!
அன்னை நாட்டினை விடுதலை செய்க!

# செய்திகள்

## 1. உ.த.க. உரத்தநாடு—பாவேந்தர் பிறந்தநாள் விழா.

1. கடந்த விடை 17. [31-5-76] காரிக்கிழமை. உரத்த நாடு உ-த-க. சார்பில், பாவேந்தரின் 84-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா கொண்டாடப் பெற்றது, அதன் முதல் நிகழ்ச்சியாக. அன்று காலை 10 மணியளவில், ஆசிரியர் பெருஞ்சித்திரனார் தலைமையில் பாவேந்தர் என்னுந் தலைப்பில், பாட்டரங்கம் நடந்தது. அதில் 'பாவேந்தர் 'இளந்தென்றல்' என்றும், திரு. கயற்கண்ணன், 'எரிமலை' என்றும், கிருட்டிணன், 'பெண்மை போற்றியவர்' என்றும், திருவாட்டி அன்பு வல்லி, 'பகுத்தறிவுப் பாவலர்" என்றும், திரு. வைத்தியலிங்கம், 'இனக் காவலர்' என்று ந. கௌதமன் — ஆகியோர் பாடினர். தொடக்கத்தில் உரத்தநாடு உ-த-க. தலைவர் திரு. கயற்கண்ணன் வரவேற்புரை கூறினார். நிகழ்ச்சி ஒருமணியளவில் இனிதே முடிந்தது.

2. அன்று பிற்பகல் 7 மணியளவில் அவ்வூர் உதவி-மின் பொறியாளர் திரு, மா. செல்லக்கண்ணு அவர்களின் தொடக்க வுரையுடன் 'பாவேந்தர் விரும்பியது — தமிழகப் பிரிவினையே — 'மாநிலத் தன்னாட்சியே' என்னுந் தலைப்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நடுவாண்மையில் பட்டிமன்றம் நடந்தது. 'தமிழகப் பிரிவினையே' என்று திருவாளர்கள் இரா. பாவாணன், பொன். மதிவாணன், கதிர், தமிழ்வாணன், சாமி- தவிடன் ஆகியோர் தருக்கமிட்டனர். 'மாநிலத் தன்னாட்சியே' என்று திருவாளர்கள் சி. அரசிறைவன், அருள்நம்பி, தொல்காப்பியன், சா. அடலெழிலன் ஆகியோர் தருக்கமிட்டனர். நடுவர் தம் இறுதித் தீர்ப்பில், "பாவேந்தர் விரும்பியது தமிழகப் பிரிவினையே" என்று தீர்ப்பளித்தனர். பட்டிமன்றம் இரவு 11 மணியளவில் இனிதே முடிவுற்றது.

3. விழாவின் தொடர்ச்சியாக, [1—6—75] ஞாயிறு இரவு 8 மணியளவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில், கருத்தரங்கம் ஒன்று நடந்தது. அதில், சட்டமன்ற உறுப்பினர் திரு. எல். கணேசன், அவர்களும், "பாவேந்தரின் குமுகாய நோக்கு" என்னும் தலைப்பில் விடுதலை ஆசிரியர் திரு. கி. வீரமணி அவர்களும், 'பாவேந்தர் ஓர் உலகப் பாவலர்' என்னும் தலைப்பில், காரைக்குடி செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், புலவர். திரு. நா. இராமநாதன் அவர்களும் உரையாற்றினார். இரவு 11 மணியளவில், உரத்தநாடு உ-த-க. செயலர் திரு பா. இறையெழிலன் நன்றியுரைக்குப் பின் விழா சிறப்புற முடிவுற்றது. விழாவின் இறுதியில், அடுத்துவரும் பாவேந்தர் பிறந்த நாளுக்குள் அவர்க்கு அஞ்சல் தலை வெளியிடுமாறு நடுவணரசைக் கேட்டுக்கொள்ளும ஒரு தீர்மானமும், அவர் சிலையை இப்பொழுதுள்ள இடத்திலிருந்து அகற்றவேண்டாமென்று புதுவை அரசைக் கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானமும். கூட்டத்தின் முழு வரவேற்புடன் ஒரே மனதாக நிறைவேற்றப் பெற்றன.

## 2. கீரமங்கலம் உ. த. க. ஆண்டு விழாவும், பாவேந்தர் பிறந்த நாள் விழாவும்.

தி. பி. 2006, விடை 19, [2-6-75] திங்கள் மாலை 7 மணியளவில், புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் கலைவாணர் திடலில் உ-த-க. ஆண்டுநிறைவு விழாவும், பாவேந்தர் விழாவும் இனிதே கொண்டாடப் பெற்றன. விழாவிற்கு, திரு. சிவ. திருவேங்கடமலை அவர்கள் தலைமை தாங்கினார்கள், தென்மொழி ஆசிரியர், பாவலர். பெருஞ்சித்திரனார் அவர்கள், 'உலகத் தமிழர்கள்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள். மற்றும், திருவாளர்கள் சா. விவேகானந்தன், க.இ.ஆ ப., கரு. காளிமுத்து, அறி. இ., சி. வேலாயுதம், காசி. இராமச்சந்திர துரை, சி. தமிழ்க்குமரன், மு. சிவந்த பெருமாள், க மு., ந, முருகேசன், க-மு, மு. இளங்கண்ணன், க-இ, அ. வெ. தியாகராசன் ஆகியோரும், உ-த-கவின் தொண்டுபற்றியும், தென்மொழியின் கொள்கைச் சிறப்புப் பற்றியும், ஆசிரியரின் அரும்பெரு முயற்சி பற்றியும் பாராட்டிப் பேசினர், இரவு 11-30 மணியளவில் கூட்டம் இனிதே முடிவுற்றது.

## 3. தஞ்சை — ஆம்பற்பட்டு, பாவேந்தர் பிறந்த நாள் விழா.

கடந்த விடை 20, [3-6-75] செவ்வாய் இரவு 8-30 மணியளவில், தஞ்சை மாவட்டம் ஆம்பற்பட்டு, கீழக் கோட்டையில், அவ்வூர் தமிழர் நலன் வளர்ச்சிக் கழகச் சார்பில், பாவேந்தர் விழா கொண்டாடப் பெற்றது, உரத்த நாடு உதவி மின் பொறியாளர், திரு, மா, செல்லக்கண்ணு, பொறி-இ. தலைமை தாங்கினார். அடுத்து பா. முருகவேள், இளவழகன், மணிவண்ணன், சாமி, தவிடன், அறி-இ; ஆகியோர் உரையாற்றினர், இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், பாவேந்தரின் கொள்கை, தமிழர் நலன்பற்றி 2 மணி நேரம், அரியதொரு சிறப்புச் சொற்பொழிவாற்றினர், பொதுவுடைமை உணர்வு மிக்க அவ்வூர் உழவர் பெருங்குடி மக்கள், இரவு 12-30 வரையிலும் ஆசிரியரின் சொற்பொழிவை அமைந்துகேட்டது குறிப்பிடத் தக்கது, இறுதியில் புலவர், திரு, சு. அய்யாவு அவர்கள் நன்றியுடன் விழா சிறப்புற முடிவுற்றது.

## 4. தஞ்சை — திருக்காரவாசல் — பாவலரேறு வருகை விழா.

கடந்த விடை 21. [4-6-75] அறிவன் கிழமை, மாலை 8 மணியளவில், தஞ்சை மாவட்டம், திருக்காரவாசல் திருவள்ளுவர் இலக்கியக் கழகம், பாவலரேறு வருகை விழாவைக் கொண்டாடியது. புலவர். மா. தமிழ்மணி வரவேற்புரை யாற்றினார், கூட்டத்திற்குத் தஞ்சை மாவட்ட உ-த-க, அமைப்பாளர், புலவர், திரு. த. ச. தமிழனார், தலைமை தாங்கினார், அடுத்துப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் 'திருக்குறளும், வாழ்வியலும்' என்னுந் தலைப்பில் அரியதொரு கருத்துரையாற்றினார், சொற்பொழிவுத் தொடக்கத்தில், 'தம் வருகையை விழாவாகக் கொண்டாடுவது அத்துணைச் சிறப்பன்று' என்று விழா

வமைப்பாளர்களைக் கண்டித்துப் பேசினார். கூட்டம், இரவு 11-30 மணியளவில் திரு. இரா. கோபாலகிருட்டிணன் அவர்களின் நன்றியுரைக்குப் பின் சிறப்புடன் முடிந்தது.

## 5. உரத்தநாடு மது ஒழிப்புச் செயற்பாட்டு மாநாடு.

கடந்த விடை 22, [5-6-75] தஞ்சை, உரத்தநாடு, கீழத் தோட்டத்தில், உரத்தநாடு வட்ட மது ஒழிப்பு மாநாடு மிக்க சிறப்புடன் கொண்டாடப் பெற்றது, விழாவில் தமிழக அமைச்சர் திரு. மன்னை, நாராயணசாமியும், சட்ட, நாடாளுமன்ற, மேலவை உறுப்பினர் பலரும், ஊராட்சி ஒன்றிய நகரமன்றத் தலைவர் பலரும், உயர்மட்ட காவல் துறை அதிகாரிகளும், அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும், அறிஞர் பெருமக்களும் கலந்து கொண்டனர். காலையில் மது ஒழிப்புக் குழுக்களின் ஊர்வலம், கலை நிகழ்ச்சிகள். இன்னிசை, நாட்டியங்களுடன் சிறப்புற நடந்தது. காலையில் கருத்தரங்கமும், மாலையில் பாட்டரங்கம், பட்டி மன்றங்களும் மிகவும் சிறப்பாக நடந்தன. மாலைப் பாட்டரங்கத்தில், தென்மொழி ஆசிரியர், பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையேற்றுப் பாடினார். அதன் பின், 'மதுவால் அழிவது' (1) மானம், (2) குலம், (3) கல்வி, (4) அறிவு, (5) பொருள், (6) முயற்சி என்னுந்தலைப்புகளில், முறையே, பாவலர்கள் த, தோழப்பன், இரா, பன்னீர்ச்செல்வன், பொன்னிவளவன், அ. அரங்கசாமி, இரா. பண்டரிநாதன், கோவி. தமிழேந்தி ஆகியோர் பாடினர். அதன்பின், பட்டிமன்றம் நடந்தது. இறுதியில் நாடகத்துடன் மாநாடு சிறப்புற முடிவுற்றது. மாநாட்டில் உரத்தநாடு உ-த-க, செயலர், பா, இறையெழிலன், எல்லா முயற்சிகளிலும் முனனின்று உழைத்ததும் குறிப்பிடத்தக்கது.

## 6. தஞ்சை—கருக்காடிப்பட்டி தமிழக விடுதலை இயக்கப் பொதுக்கூட்டமும், கொடியேற்றலும்.

தஞ்சை, கருக்காடிப்பட்டியில், கடந்த விடை 24, (7-6-75) காரிக்கிழமை, இரவு 8 மணியளவில், தமிழக விடுதலை இயக்கக் கூட்டம் நடந்தது. தொடக்கத்தில், கருக்காடிப்பட்டிக் கிளை அமைப்பாளர், திரு, ந, வை, இளஞ்செழியன், அவர்கள் தலைமையில், தமிழக விடுதலை கழக அமைப்பாளர், ஆசிரியர் பெருஞ்சித்திரனார், அவர்கள் ஊர்ப் பொதுவிடத்தில், விடுதலை இயக்கக் கொடியினை ஏற்றிவைத்து, அங்கிருந்து ஊர்வலமாகப் பள்ளித்திடலுக்கு, விடுதலை முழக்கங்களுடன் வந்தார், பின்னர் கூட்டம் நடந்தது. இயக்கக் கருத்துகளை விளக்கி, ப, முருகவேள், சாமி-தவிடன், அரு. மணிவண்ணன், மா. பொழிலன், (13 அகவையுடைய ஆசிரியர் பெருஞ்சித்திரனாரின் மகன்) ஆகியோர், தமிழக விடுதலையின் இன்றியமையாமை பற்றிப் பேசினார்கள், இறுதியில் பெருஞ்சித்திரனார். இரவு 12 மணி வரை இயக்கத்தின் தேவை பற்றியும். தமிழ்நாடு விடுதலை அடைய வேண்டுவது குறித்தும் மிக விளக்கமாகவும், விரிவாகவும் கருத்துரையாற்றினார். திரு. வே. இளஞாயிறு அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## 7. தஞ்சை—மன்னார்குடி—உ. த. க. தொடக்க விழா.

கடந்த விடை 25, (8-6-75) அன்று மாலை 7 மணியளவில் தஞ்சை, மன்னார்குடியில் சாரதி கலையரங்கில், புலவர் வை. தமிழ்க் குமரன், அவர்கள் தலைமையில் உ-த-க. தொடக்க விழா இனிதே நடந்தது, மன்னார்குடி, உ-த-க, தலைவர் திரு. நா. நடத்தரசன், வர வேற்புரையாற்றினார். பின்னர் உ-த-க. கொள்கைகளை விளக்கியும், தமிழின் சிறப்பியல்கள் குறித்தும், பாவலர். பெருஞ்சித்திரனார் சிறப் புரையாற்றினார். பின்னர் நகரப் பேராயக் கட்சித் தலைவர் சிவா. இராசமாணிக்கம், அவர்கள் முன்னிலையிலும், மன்னை ஒன்றியத் தி.மு.க செயலர், இரா. தென்னவன், அவர்கள் தலைமையிலும், மன்னை உ-த-க. அன்பர்குழு நடித்த 'நட்பிற்காக' என்னும் கொள்கை நாடகம் நடைபெற்று, விழா இனிது முடிவுற்றது.

## 8. வ. ஆ. நடுப்பாலாபுரம், கணேசன்-இராணி திருமணம்.

கடந்த (29-6-75) ஞாயிறு காலை 9 மணியளவில், வ-ஆ. சோழலிங்கபுரம், நடுப்பாலாபுரத்தில் தென்மொழியன்பர் கணேசன் அவர்களுக்கும், செல்வி. 'அரசி' என்னும் இராணிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார், அவர்கள் தலைமையிலும், ஆசிரியர் இரா. தங்க வேலனார், அவர்கள் முன்னிலையிலும் திருமணம் இனிதே நடந்தது. மலைச்சாரல் ஆசிரியர் திரு. இரா. சோதிவாணன், க-மு.-ச-இ, அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார், திருவாளர்கள் வே, மு, துரை சாமி, பெரியசாமி, இரா. சந்திரசேகரன், அறி-இ, அ, கிருட்டிணன், அறி.இ, (வேளாண்,), நீ, சகாதேவன், அறி இ, சோ. சு, யுவராசன், செம்பியன் (தமிழம் ஆசிரியர்), ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர், திரு, பஞ்சாட்சரம் அவர்கள் நன்றி நவின்றார், தமிழாசிரியர் மு. செல்வநாதன் அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா, 5-00 நன்கொடை அளித்தார், மணமக்கள் இனிது வாழத் தென்மொழியும் வாழ்த்துகிறது.


தனித்தமிழ் வளர்ச்சிக்குத் தென்மொழியணியில்
மேலும் ஒரு குரலோசை!

# தமிழோசை


திங்களிதழ்,

சிறப்பாசிரியர்: புலவர். த ச. தமிழன்

இயற்றமிழ்ப் பயிற்றகம்

திருவாரூர், தஞ்சை மாவட்டம்.

தனியிதழ் 60 காசுகள் ஆண்டுத்தொகை உருபா 6.



# நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு ௩௮.

பிரிவுறு மகனே ! பிரிவுறு மகனே !
அறிவமை கழகத் தன்றன் றாயும்
நெறிமுறை பயில்ப் பிரிவுறு மகனே !
எறிதிரை முந்நீர் இழைந்ததர் தப்பிய
கலங்கரைந் துய்க்கும் கதிர்சுழல் விளக்கம்
சேண்தடவு மாடச் சென்னையம் பதியின்
ஓவத் தெருவும், கோவினைக் கோட்டமும்
நெறிதரு மன்றும் திரிதரு மக்களும்
கான்படு விலங்கின் காட்சியும் அவ்வினத்
தூன்படு பொய்யுடல் உயிர்பெறு வியப்பும்
அருந்தற் பொருள்களும் மருந்தின் மனைகளும்
திருந்தா உள்ளம் திசைதிசை வீழ்த்தும்
ஒளிநடக் காட்சியும் ஒலியின் ஒக்கமும்
களிகொள் ஒதுக்கமும் கலிஆ வணமும்
விலைகூய்ப் புணர்ந்து நோய்பல வித்தும்
பொலிவுடல் தோற்றத்துப் போலி மகளிரும்
புறம்புனை மயக்கின் புரைநா கரிகத்
தறம்பிறழ் வினைகளும் அலவே சிறந்தன !
இசைபெறு கல்வியின் ஏர்ந்தன் றொழுங்கே !
வசைபெறு வாழ்வின் மாய்கை நன்றே !
தசைபெற லன்றே வாழ்க்கை ! தசையுடன்
அறிவும் உணர்வும் அவையினு முண்மையும்
செறியுநல் லுயிர்க்குச் சிறப்பென் றாரே !
உண்கையு முடுக்கையு முறுபொருள் பெறுகையுங்
கற்ற லன்றே கல்வி
முட்டறப் பொருந்திய உட்புலன் முனைப்பே !

பொழிப்பு :

பிரிந்து செல்லும் மகனே ! பிரிந்து செல்லும் மகனே ! அறிவு நிறைந்த கல்விக் கழகத்தே, அன்றன்று புதுவதாக ஆராய்ந்து

அறிகின்ற வாழ்வு முறைகளைப் பயில்வதன் பொருட்டுப் பிரிந்து செல்லும் மகனே! வீசுகின்ற அலைகளையுடைய கடலில் உராய்ந்து சென்று வழி தவறிவிடும் கப்பல்களைக் கூவியழைத்துக் கரை சேர்க்கும் சுழல்கின்ற கலங்கரை விளக்கின் ஒளிக் கதிர்கள் தடவிச் செல்லுகின்ற உயர்ந்த மாடங்களைக் கொண்ட சென்னையென்னும் அழகிய நகரின், ஓவியம் போன்ற தெருக்களும், அரசுப் பணி நிகழும் அரண் சேர்ந்த கட்டடமும், அறநெறிகளை ஆய்ந்து தீர்ப்புத் தரும் அறமன்றமும், வினையின் பொருட்டாதல், வினையின்மை பொருட்டாதல் பல திசைகளிலும் விரைந்து திரிகின்ற மக்கள் கூட்டமும், காடுகளில் பிடிக்கப்பெற்ற விலங்குகளை அடைத்து வைத்துக் காட்டும் காட்சியும், அவை போலும் இறந்துபோன விலங்குகளின் தசைகளை நீக்கி அவற்றின் தோல்களால் பொய்யாய்ச் சமைக்கப்பெற்று உயிருள்ள உடல்கள் போல் தோற்றுவிக்கும் வியப்புப் பொருந்திய பழம் பொருள் காட்சியும், துய்ப்பதற்குரிய பல நுகர்ச்சிப் பொருள்களும், அவற்றால் விளையும் நோய்களைப் போக்குகின்ற மருத்துவ மனைகளும், செப்பமில்லாத உள்ளமுடையவர்களை நாற்புறத்தும் கவர்ந்து அடிமைப்படுத்தும் ஒளியுருப் படக் காட்சிகளும், ஆரவார ஒலிகளின் பெருக்கமும், களியாட்டங்கள் நிறைந்த ஒதுக்குப் புறங்களும், ஆரவாரம் மிகுந்த கடைத்தெருக்களும், விலை வைத்துக் கூவி உடன்பட்டவர்களைத் தழுவிப் பல வகை நோய்களைத் தோற்றுவிக்கின்ற, பொலிவுமிக்க உடல்களையுடைய பெண்மைச் சிறப்பு நீங்கிய மகளிரும், புறத்தே புனைவு மிகுந்து மயக்கத்தைத் தருகின்ற தீமைமிக்க நாகரிகத்தின் அறம் பிறழ்ந்த செயல்களும் ஆகிய இவை சிறப்பானவை அல்ல. புகழ்பெறுகின்ற கல்வியைவிட உயர்ந்தது ஒழுக்கம். இகழ்ச்சி பெறுகின்ற வாழ்வைவிட மாய்ந்துபோவது நல்லது. உடல் தசைகளை வளர்க்கப் பெறுதலன்று வாழ்க்கை. நல்ல உடல் அமைப்புடன் கூடிய நல்லறிவும் நல்லுணர்வும், இனி, அவற்றை விட உள்ளத்து உண்மையும் செறிந்து விளங்குவதே, உயிர் வாழ்க்கைக்குச் சிறப்புத் தருவதாகும் என்றார் முன்னோர். அதனால் உண்ணுவதும், உடுப்பதும், அவற்றுக்குத் தேவையான பொருள்களை எவ்வகையானும் ஈட்டுவதும் கற்றுக்கொள்வதன்று கல்வி; உயிர் வளர்ச்சிக்குள்ள தடைகள் அகலும்படி, அதற்குப் பொருந்திய உள்ளுணர்வின் எழுச்சியாகும் அது!

விரிப்பு:

இப்பாடல் புறத்துறையைச் சேர்ந்தது.

கல்வி கற்பதற்காகப் பெற்றோரைப் பிரிந்து செல்லும் மகனிடம், உலகியல் உணர்ந்த தந்தையார் அறிவுரை கூறித் தெளிவுறுத்துவதாக அமைந்ததிப் பாடல்.

"பிரிதலுறும் மகனே! நீ கல்வி கற்கப்புகும் நகரின் சிறப்பியல்களாக நீ கருதிக் கொண்டிருக்கும் அவையல்ல உயர்ந்தன; கல்வியே உயர்ந்தது; அக் கல்வியினும் உயர்ந்தது ஒழுக்கம். ஒழுக்கம் திரிந்த இழிவான வாழ்வைவிட இறந்துபோதலே நல்லது. உடல் நலமும் உள்ள நலனும் நடை நலனும் சேர்வதே உயிர் வாழ்க்கைக்குச் சிறப்புத் தருவது. எனவே உண்பதும், உடுப்பதும், அவற்றுக்கான பொருளைத் திரட்டுகின்ற வழிமுறைகளைக் கற்றுக் கொள்வதுமே கல்வி என்று பிறழ உணராமல், உயிரின் முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள முட்டுப்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளும் மெய்ப்புலன் எழுச்சியே கல்வியாகும் என்று உணர்ந்துகொள்!" —என்று அறிவுறுத்துவதாக அமைந்ததிப் பாட்டு.

இப் பாட்டில் கல்வியின் முழுச் சிறப்பும், நோக்கமும், பெருமையும் கூறப்பட்டன.

மகன் ஒருவனது கல்வி நலனில் அவனைப் பெற்றோர்க்கே, அதினும், அவன் தந்தைக்கே மிகுந்த அக்கறை இருத்தல் உலகியல்பு ஆதல் பற்றித் தந்தையின் கூற்றாக இது கொள்ளப் பெற்றது. உண்மைக் கல்வி எவ்வாறிருத்தல் வேண்டும் என்பதைச் செவியறிவுறுத்தலாகவும் கூறப்பெற்றது என்க.

**பிரிவுறும் மகனே!:** பிரிதலுறும் மகனே!; பிரிவுறு மகனே என மும்முறை அடுக்கியது, அன்பும், உரிமையும், அக்கறையும், கடமையும், ஆற்றாமையும், எச்சரிக்கையும் போன்ற பல உணர்வுகளை வெளிப்படுத்தவேண்டி என்க! பிரிவு கல்வியென்னும் இயற்கைக் கரணியம்பற்றி நிகழ்வதாகலின், உறுதல் என்னும் தன்வினை நேர்ச்சிச் சொல்லால் உணர்த்தப்பெற்றது.

**மகன்** என்னும் அகடூஉ முன்னிலையால் விளிக்கப்பெற்றது, பெற்றோர் உடன்போகாத் தனிமை குறித்தலான் என்க. மகடூஉ வாயின் உடன் துணை போகும் நேர்ச்சியான், பிரிவுறு வினை நிகழாதென்க.

**அறிவமை.........பயில:** ஆன்றவிந்தடங்கிய சான்றோர் இருந்து பயிற்றும் கழகமாகலின் அறிவமை கழகம் எனப்பெற்றது. இனி, நாள்தோறும் பெறும் அறிவு வளர்ச்சிக்கேற்பப் பயிற்றுவித்தல் கல்விக் கொள்கையாகலின், **அன்றன்றும்** எனப் பெற்றது.

**நெறி முறை** என்றது, உலகின் இயற்கை நெறிகளையும், வாழ்வியல் நெறிகளையும் முறையாகப் பயிற்றுவிக்கும் கல்வியை என்க. கல்வி தன் முயற்சியால் விளையும் உணர்வாகலின் **பயில** எனப்பெற்றது.

**எறிதிரை முந்நீர் இழைந்து:** எழுந்து வீசுகின்ற அலைகளையுடைய கடல்நீரில் உராய்ந்து.

**அதர் - தப்பிய கலம்:** வழி தவறவிட்ட கப்பல். கடல் நீரைக் கிழித்துக்கொண்டு தன்வழியில் போகப் புறப்பட்ட கலம், கடல் நீரின் போக்கில் சென்றதால் வழி தப்பியதை "முந்நீர் இழைந்து அதர் தப்பிய" என்பதால் உணர்த்தப் பெற்றது.

இனி, கல்வி கற்கப்புகும் நீ, நகரின் சூழலை எதிர்த்துக்கொண்டு, உன் வழியில் செல்லாமல் நீ கற்கப் புகும் நகரின் சூழலில் அகப்பட்டு வழி தப்பிவிடக்கூடாது என்பதைத் தந்தை எச்சரித்தார் என்க. அங்குள்ள நகரச் சூழல்கள் எழுந்து வீசுகின்ற அலைகளைப் போலும், ஆழ்ந்த கடலைப்போலும் வலிவுடையனவாக இருப்பினும், நீ, தன் ஆற்றல் தவிர்ந்த கப்பல், கடல் நீரின் போக்காகப் போய் வழி தவறி விடுதல்போல் தவறிவிடக்கூடாது என்பதாகக் கூறினார் என்க.

ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர் ஆகிய மூன்று நீர்களும் சேர்வதால் கடல் "முந்நீர்" எனப்பெறும். அச்சொல்லால் கடலை இவ்விடத்துக் குறித்தது, நகரத்தை உருவகப்படுத்துவான் வேண்டி என்க. நகரம் பல போக்குடைய மாந்தர்களைக் கொண்டதாகலின், அதனை முந்நீர் போன்றது என்றார்.

மழை நீர் சான்றோர்க்கும், ஊற்று நீர் உலகியல் உணர்வுடைய நடுநிலை மாந்தர்க்கும், ஆற்று நீர் உலகியல் தீமைகளையெல்லாம் கைக்கொண்டொழுகும் கீழ்நிலை மாந்தர்க்கும், இம் மூவகை மாந்தரும் கலந்து வாழும் நகரம், முந்நீர் என வழங்கும் கடலுக்கும் உருவகிக்கப் பெற்றன என்க.

தீமையும் நன்மையும் சார்ந்த உலகில் வாழ்ந்தாலும், கதிரவன் போலும் அறிவு வெப்பத்தால் பிரித்தெடுக்கப் பெற்று, அவ்வப்பொழுது தம்மைத் தூய்மைப் படுத்திக்கொண்டு, மேனிலை எழுச்சி பெற்று, மழை போலும் தூய அறநெறிகளை பரந்துபட்டு வழங்கும் தன்மையராய்ச் சான்றோர் உளராகலின், அவர் மழை நீர் போல்வார் என்றார்.

உலகியல் உணர்வால் அழுந்தி நின்று, தாம் இருக்கும் இருப்பிலேயே தம்மளவில் ஊறிச் சுரந்து, தம்மைச் சார்ந்தார்க்கு மட்டுமே நின்றுதவும் தன்மையராகியோர் நடுநிலை மாந்தராகலின், அவர் ஊற்று நீர் போல்வார் என்றார்.

இனி, தோற்றத்து எளியராகவும், வாழ்வியல் ஓட்டத்து, வழியின் கண் பெற்ற அனைத்துத் தன்மைகளையும் தம்முள் கரைத்துக் கொண்டு திரிபுற்றவராகவும், கரைகட்டித் தேக்கின் நன்மையும், தேக்காவிடத்துக் கரைபுரளும் வெள்ளம் போல் தீமையும் செய்யும் திறத்தினோராகியோர் கீழ்நிலை மாந்தராகலின், அவர் ஆற்று நீர் போல்வார் என்றார்.

இத்திறத்து, இம் மூவகை மாந்தரும் கலந்தியக்கும் நகரம், அம் மூவகை நீரும் கலந்தியங்கும் கடல் போல்வதாகும் என்றார்.

இம்மூவகை மாந்தத் தன்மைகளையும் இராசச, தமச, இராக்கத குணங்கள் என்பர் ஆரிய நூலார். அந்தண்மை, மாந்தன்மை, கயமை என்பது தமிழ்ச் சான்றோர் வழக்கு என்க.

**கலம் கரைந்துய்க்கும் கதிர் சுழல் விளக்கம் :** கப்பல்களைக் கூவி அழைத்துக் கரைசேர்த்து உய்விக்கும் ஒளிக்கதிர்கள் சுழல்கின்ற பெரிய விளக்கம். **கரைதல்**-கூவி அழைத்தல்.

"அவ்வாறு நகர்ப்புறச் சூழலில் மயங்கி, நின் கல்வி நோக்கைக் கைநெகிழ விட்டு வழி தடுமாறி நீ நிற்கின்ற பொழுதில், என்னின் இந்த உரை நினக்கு, வழி தப்பிய கப்பல்களைக் கூவியழைத்துக் கரைசேர்க்கும் கலங்கரை விளக்கம்போல் நின்று கை கொடுக்கட்டும்" என்னும் குறிப்புணர்வு தோன்ற, தந்தை இதைக் கூறுவாராயினர் என்க. அத்தகைய கலங்கரை விளக்கின் கதிரொளி தடவிச் செல்கின்ற உயர்ந்த மாடங்களையுடைய சென்னை நகரம் என்பார், கலங்கரைந் துய்க்கும் கதிர் சுழல் விளக்கம், **சேண்தடவும் மாடச் சென்னையம் பதி** என்றார் என்க.

"உயர்ந்த மாடங்களைத் தடவும் சுழல் கதிர்போல் இவ்வுரைகள் உன் உயர்ந்த நோக்கங்களைத் தடவி ஒளி வீசட்டும்" என்றார் என்க.

**பதி :** குடிகள் அயலிடம் பெயராமல் பதிந்து வாழும் நகரம்.

**பதிதல்** — பதிந்து வாழ்தல் — பதி. இதுவே முன்னிலை திரிந்து வதிதல் என்னும் சொல்லைத் தோற்றுவிக்கும்.

**ஓவத் தெரு :** ஓவியம் போலுள்ள அழகிய தெரு.

**கோவினைக் கோட்டம் :** அரசுப் பணி செய்யும் காவல் உள்ள மனை.

**நெறிதரு மன்று :** அறமுறை வகுக்கும் அறநெறி மன்றம்.

**திரி தருதல் :** நாற்றிசைகளிலும் ஒரு நோக்கம் பற்றியோ நோக்கமின்றியோ போய்வந்து கொண்டிருத்தல்.

**கான்படு விலங்கின் காட்சி:** காட்டில் பிடிக்கப்பட்ட விலங்குக் காட்சிச் சாலை.

**அவ்வினத்து......வியப்பும்:** அவ் விலங்கினங்கள் இறந்துபட்ட பின், அவற்றின் உடல் ஊன்களை அகற்றி, அவற்றின் தோல்களைக் கொண்டு பொய்யாகச் சமைக்கப் பெற்ற உடல்கள், உயிருள்ளவை போலவே தோற்றந்தரும் பழம்பொருட் காட்சிச் சாலை.

**அருந்தற் பொருள்கள்:** பலவகையான நுகர்ச்சிப் பொருள்கள்.

**மருந்தின் மனைகள்:** மருத்துவ மனைகள்.

இரண்டு சொற்களும் அடுத்தடுத்துப் பயில்வதால், அருந்துகின்ற பொருள்களால் வரும் நோய்களை அகற்றுவதற்குரிய மருத்துவ மனைகள் என்றும் இணைந்து பொருள் பெற்றன.

**திருந்தா உள்ளம்:** செப்பம் பெறாத உள்ளங்கள். சென்ற விடத்தால் செலவிடா தீதொரீஇ, நன்றின் பால் உய்க்கும் அறிவு குறைந்த உள்ளங்கள்.

**திசை திசை வீழ்த்தும்:** திரும்புகின்ற திசைகள் தொறும், திருந்தாத உள்ளங்களைக் கவர்ந்திழுத்துத் தன் அடிப்படுத்தும்.

**ஒளிநடக் காட்சி;** ஒளியுருவம் அசைகின்ற காட்சி — திரைப்படக் காட்சிகள்.

**ஒலியின் ஒக்கம்:** ஒலியின் பெருக்கம் — ஆரவார ஒலி.

—[தொடரும்.]


# "தமிழ்ச்சிட்டு"

## சென்னை - 5.

(தூயதமிழ்ச் சிறுவர் கலையிதழ்.)

| | உள்நாடு | கொழும்பு | பிறவெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 4–00 | 9–00 | 9–00 |
| தனியிதழ் ,, | 0–35 | 0–75 | 0–75 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் எழுதிக் கேட்க!

முன்னிதழ்த் தொடர்ச்சி :

# திரு. வி. க. வாழ்வில் பெரும்பங்கு கொண்டது மொழித்தொண்டா, பொதுத்தொண்டா ?

— பெருஞ்சித்திரன். —

— இனி நாம் செய்தியைத்
தாங்கிப் பேசுவோம்! தகவுடைப் பெரியீர்!

பட்டி மன்றின் நடுமையைப் பற்றி
நெட்டுயிர்ப் புயிர்க்கும் நிலையினில் உள்ளேன்!
கொண்ட தலைப்போ கோடாத தலைப்பு!
கண்ட கண்ட தலைப்புகள் தந்து,
'மண்டோ தரியா, சீதையா, கற்பில்
விண்டவர் யார்'—என வினாவொன் றெழுப்பிப்
பட்டி மன்றினால் பரபரப் பூட்டி
வெட்டிக் கதைகளை விடிய விடிய
ஆயிர மாயிரம் ஆண்டுகள் பரப்பி
வாயுரம் பெற்றதே அல்லால் வாழ்க்கையில்
அடிமைநீங் கிற்றா? அறியாமை பெயர்ந்ததா?
மிடிமை செத்ததா? மேல்கீழ் என்னும்
குடிமை கொல்லும் கொடுமை தவிர்ந்தமா?
இல்லையே! பின்னும் ஏனிந்த ஆய்வுகள்?
சொல்லையே தவிர்க்கையில் பொய்களைச் சொல்வதா?
எல்லாரும் இன்புற் றிருக்க எண்ணிக்
கல்லையும் மண்ணையும் காதில் திணிப்பதா?
அப்படி யில்லா அருமைத் தலைப்பிதோம்!
ஒப்புமோர் தலைப்பே! உயர்ந்த தலைப்பிது!

திரு.வி. க.—வெனும் திருவுடைத் தலைவனின்
பெருமைத் தொண்டெலாம் பெற்றது மொழியா?
பொதுமை நெறியா? —எனும்புதுத் தலைப்பு!

"மொழித்தொண் டு"—என்று மொழிகுவர், கோவை
இளஞ்சேரல், இறைக்குரு வர், தொல் காப்பியர்!
களஞ்சேர் மரபினால் 'பொது'—எனக் கழறுவர்
பாலசுந் தரனார், பன்னீர்ச் செல்வனார்
ஞானச் செல்வராம் நற்றமிழ்ப் பாவலர்!
தவமென வாழ்வையே தவறிலா நடத்தியோர்

திரு.வி. க.—வெனும் திருமா முனிவர் !
அன்னவர் ஆற்றிய மொழித்தொண் டாய்ந்து
பின்அவர் ஆற்றிய பொதுத்தொண்டு பேசி,
அறிஞர் பாவலர் புலவர் ஆகின்ற
செறிவுறு பட்டி மன்றிது ; சிறப்புறக்
கூறுவ தென்னின் குறைவிலாப் பாவினுல்
ஏறுகள் பொருதும் எழிற்பா மன்றமாம் !

சொல்தெறித் தோடும் ; பொருள்மழை சொரியும் !
வில்தெறித் தம்பு விரைவது போல
எதிரெதிர்ப் பாயும் எந்தமிழ்ச் சொற்கள் !
புதிரினிற் புதிரும் புதுமையிற் புதுமையும்
கேட்போர் நெஞ்சைக் கிளர்வுறச் செய்யும் !
வாட்போர் எனும்படி வாய்ப்போர் நிகழும் !
மற்போர் கண்ட மனமெலாம் மலைக்கச்
சொற்போர் பாச்செறி சுவைப்போர் காண்க !

கோவை இளஞ்சேரன் திரு.வி.க. வாழ்வின்
பெரும்பங்கு மொழித்தொண் டென்று பேசுவார் !
அவர்அணித் தலைவர் ! அவருக் குப்பின்
பொதுத்தொண் டென்று பாலசுந் தரனுர்—
எதிர்அணித் தலைவர்— எதிர்நின் றியம்புவார் !

முதற்கண் பாவலர் கோவை— பாக்கோவை—
கோவை இளஞ்சேரன் எனும் பாக்
கோவை அழைப்பேன் கொள்கை சாற்றவே !

[கோவை இளஞ்சேரனின் பாத் தருக்கம்]

[அதுமுடிந்து, பாலசுந்தரனுர்க்கு அழைப்பு]

அடுத்தவர் புலவ ரேறு
ஆன்றவிந் தடங்கு கொள்கை
எடுத்தவர் ; எந்த மிழ்த்தாய்
ஏற்புற் எழிற்பா மாலை
தொடுத்தவர் ; அவரை யாம்போய்த்
தொடுக்கனும் கருத்தை யென்றே
விடுத்தனம் வேண்டு கோளே !
விளைவிப்பார் கருத்தை ! கேட்போம் !

[பாலசுந்தரனாரின் பாத்தருக்கம்]

[அது முடிந்து. புலவர் இறைக்குருவனார்க்கு அழைப்பு]

புலம்பெரிதால் ஆன்று பொலிந்ததமிழ் வாழும்
நிலம்பெரி தென்று நினைந்து—வலம்புரியால்
இன்றமிழைக் காக்கும் இறைக்குருவ னார்கொள்கை
மன்ற மிசை நிற்க மணந்து !

[இறைக்குருவனாரின் பாத்தருக்கம்]

அது முடிந்து, பன்னீர்ச்செல்வனார்க்கு அழைப்பு]

வேந்தம் எனுமோர் விறல்தமிழ்த் தாளிகை விண்டளித்துக்
காந்தம் எனநற் கவின்பாத் திறத்தால் கனிந்ததமிழ்
மாந்தம் உயர மனமொழி மெய்தரும் மாண்புடைய
ஏந்தல்பன் னீர்ச்செல்வன் காட்டுக ஏற்றம் எழுந்துவந்தே !

[பன்னீர்ச்செல்வனாரின் பாத்தருக்கம்]

[அது முடிந்து, தொல்காப்பியனார்க்கு அழைப்பு]

பாப்புலவர் தொல்காப் பியப்புலவர் பாய்ந்தெழுந்தால்
யாப்பவர்முன் மண்டியிட்டே யாக்காதோ — காப்புளரேல்
தப்புவர்காண்! மற்றுத் தலைதாழ்த்தித் தங்கருத்துக்
கொப்புவர் காண் மன்றே டுவந்து !

[தொல்காப்பியனாரின் பாத்தருக்கம்]

[அது முடிந்து, ஞானச் செல்வனார்க்கு அழைப்பு]

பொதுத் தொண்டே திரு.வி.க.-வின்
புகழ்த்தொண்டாம்; பொலிந்த தொண்டாம் !
மதுக்கிண்டும் பொறிவண் டேபோல்
மலர்த்தமிழ்க் குந்திக் கிண்டி
மிதக்கிலை இன்பத் தால்அம்
மேலான தலைவர் என்றே
புதுக்குவர் கருத்தை ஞானச்
செல்வர்யாம் புகழு மாறே !

[ஞானச் செல்வனாரின் பாத் தருக்கம்]

[மறு சுற்று தலைவர்களுக்கு மட்டும்]

ஈரணி அறுவர் பாங்கும்
  ஒருசுற்று முடிந்த திங்கு!
யாரணி சிறந்த திங்கே?
  எவரணி வென்ற, தென்றே
ஓரணி யான தீர்ப்பை
  உரைக்குமுன் இன்னோர் சுற்று—
நேரணித் தலைவர் மட்டும்
  நின்றிங்குப் பொருதக் காண்போம்!

மன்றத்தே வீற்றி ருக்கும்
  மணித்தமிழ் நெஞ்சம் யாவும்
நன்றவர் கருத்தைக் கேட்பீர்!
  நடுநிலை உள்ளத் தோடு,
வென்றவர் யாவர் என்றே
  விளக்கமுற் றிருப்பீர்! வாழ்ந்து
சென்றவர் பெருமை யாவும்
  செந்தமிழ்ப் பெருமை யன்றோ?

முன்னவர் பால சுந்தரம்
  முதலணிக் கருத்தைப் பாவால்
சொன்னநற் கருத்தை யெல்லாம்
  தொகுத்துரைத் தின்னுஞ் சொல்வார்!
பின்னணிக் கருத்தை யெல்லாம்
  பேசுவார் கோவைச் சேரல்!
இன்னவர் முடித்த பின்னர்
  என்தீர்ப்பை வைப்பேன் இங்கே!

[கோவை இளஞ்சேரனுக்கு அழைப்பு]

கோவை இளஞ்சேரன் கொள்கை தொகுத்துரைக்க
மேவுகயிம் மேடை மிசை!

[பாலசுந்தரனார்க்கு அழைப்பு]

இன்பால சுந்தரனார் ஏற்கும் திரள்கருத்தை
முன்பாக வந்து முழங்கிடவே — அன்பால்
அழைக்கின்றேன் ஈங்கவரை; ஆங்கவர்க்குப் பின்னர்யான்
இழைக்கின்றேன் தீர்ப்பை எடுத்து!

—[தொடரும்.]

# மக்களவை

## ம : 204 : வணிகர்களே ! வணிகர்களே !
## இனியாவது இனிய தமிழில் எழுதுங்கள்.

வணிகப் பெருங்குடி மக்களே !

தமிழில் பெயர்ப் பலகை எழுதாத வணிகர்களுக்கு உரிமம் (லைசென்ஸ்) வழங்கப்படமாட்டாது என்று சட்டம் செய்யப் போவதாக முதலமைச்சர் காரைக்குடியில் அறிவித்தார். ஆகவே, எங்களுடைய பணி எளிமையாகிவிட்டது. ஒரு வேண்டுகோளில் நடைபெற்றிருக்க வேண்டிய ஒன்றிற்கு ஒரு சட்டம் செய்ய நேரிட்டிருக்கிறதே என்று வருங்காலத் தலைமுறையினர் நம்மை நகையாடப் போகிறார்களோ என்னவோ ?

சட்டக் கட்டாயம் என்று எண்ணினாலும் சரி, காலக் கட்டாயம் என்று எண்ணினாலும் சரி, வணிகர்கள் இனியாயினும் தங்கள் கடையின் பெயர்ப் பலகைகளை இன்பத் தமிழில் எழுத முன்வரவேண்டும். தமிழ் என்பது (& பிரதர்ஸ்) என்றும், (& சன்ஸ்) என்றும் தமிழ் எழுத்துக்களால் எழுதுவதன்று. தனித் தமிழ்ச்சொற்களைப் பெய்யவேண்டும்.

எவர்சில்வர் மார்ட் என்பதை, 'நிலைவெள்ளி அங்காடி' என்று எழுதவேண்டும் என்று நாங்கள் சொல்லுகிறோம். 'அப்படியா ? இப்படி ஒரு சொல் இருப்பதே எங்களுக்குத் தெரியாதே' என்று ஒரு வணிகர் கூறினால், அதை எங்களால் பரிவோடு புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், 'அன் சன்ஸ்' என்றும், 'அன் பிரதர்ஸ்' என்றும், 'மெடிக்கல் ஷாப்' என்றும், 'டைலர்' என்றும், 'லாண்றி' என்றும் எழுதியிருப்பதைப் பார்க்கும்போது, பார்க்கும்போதெல்லாம் அடி வயிற்றில் பற்றி எரிகிறது வணிகப் பெருமக்களே, பற்றி எரிகிறது.

வெள்ளைக்காரன் இந்த நாட்டில் 'லாண்றி'யை இறக்குமதி செய்வதற்கு முன்னால்வரை நம் முன்னோர்கள் அழுக்கையா கட்டிக் கொண்டு திரிந்தார்கள் ? 'டைலர்' என்னும் சொல் அறியப்பட்ட பின்புதான் தமிழர்கள் தைத்து உடுத்தக் கற்றுக் கொண்டார்களா ?

கையெழுத்துப் போடச் சொன்னால், கட்டை விரலைத் தூக்குகிறவர்கள் நூற்றுக்கு எண்பது பேராக உள்ள ஒரு நாட்டிலே, மீதியுள்ள இருபது பேரிலும் ஐந்து பேர்களே ஆழ்ந்து படித்தவர்களாக

உள்ள ஒரு நாட்டிலே 'டிம்பர் டிப்போ', 'ஜுவல்லரி மார்ட்', 'பார்மஸி' என்றெல்லாம் எழுதுவது யாருக்குப் புரியும்?

தைத்த துணியைத் தமிழிலே ஆடை என்று சொல்வார்கள். அதை விற்கின்ற ஒருவர் தன்னுடைய கடையை 'ஆடையகம்' என்று அழைத்துக் கொண்டால் என்ன? அதற்குப் பெயா 'டிரஸ் சென்ட்டா'ம்.

இந்த உணவு விடுதிக்காரர்கள் இருக்கிறார்களே, அடடா. 'கிளப், கிளப்' என்று எழுதித் தமிழை இந்த நாட்டை விட்டே கிளப்பி விடுவார்கள் போலிருக்கிறது.

இலண்டனிலே பிறந்து, தேம்சு ஆற்றிலே நீராடி வளர்ந்தவர்களா நம்முடைய கடைகளுக்கு வருகிறார்கள்? இல்லை பெருமக்களே இல்லை; இன்பத் தமிழர்களே வருகிறார்கள். போனது போகட்டும் இனியாவது இனிய தமிழில் எழுதுங்கள்.

நீங்கள் பெயர்ப் பலகைகளை ஆங்கிலத்தில் எழுதக்கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. ஆங்கிலத்தில் மட்டுமில்லை வங்காள மொழியிலும் எழுதிக் கொள்ளுங்கள்; இடமிருந்தால் உலக மொழிகள் அனைத்திலும் எழுதிக்கொள்ளுங்கள். ஆனால் தமிழ்நாட்டிலே, தமிழுக்கு முதல் இடம் கொடுங்கள் என்று சொல்கிறோம்.

'மெடிக்கல் ஷாப்' என்று தமிழ் எழுத்துக்களால்தாமே எழுதியிருக்கிறோம் என்று சொல்லாதீர்கள். இத்தகைய பேச்சுகள் அறியாமை நிறைந்தவை. தமிழ் எழுத்தால் எழுதிவிடுவதனாலேயே ஒரு சொல் தமிழாகிவிடாது. மேலும் ஷா, ஜா, க்ஷா, ஸா, ஹா போன்ற எழுத்துகளெல்லாம் தமிழ் எழுத்துகள் இல்லை. தமிழனைச் சுடுகாட்டிற்கு அனுப்பத் தமிழில் நுழைந்த எழுத்துகள். அப்படியானால் கிருஷ்ணன் என்பதை எப்படி எழுதுவது என்று கேட்கிறார்கள். கிருட்டிணன் என்றுதான் எழுதவேண்டும். ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனி ஒலி அமைப்பு உண்டு. அந்த ஒலி அமைப்பைச் சிதைத்தால் மொழி சிதைந்து விடும். இந்தி மொழியிலே ஒகார ஒலியே கிடையாது. தொல்காப்பியன் என்பதை தோல்காப்பியன் என்றுதான் எழுதுவார்கள். உடனே ஐயைய்யோ 'தொ' எழுத்து இல்லையே என்று இந்திக்காரர்களெல்லாம் தூக்குப்போட்டுக்கொண்டு தொங்குகிறார்களா? எல்லா ஒலிகளையும் ஒரு மொழி பெற்றிருப்பது என்பது கடை போகின்ற செயலா?

மொழிக்கு இவ்வளவு முதன்மை கொடுக்கவேண்டுமா என்று சிலர் சலித்துக் கொள்கின்றனர், அவர்களுக்கு ஒரு சொல். உலகில் உள்ள எல்லா இனங்களும் (races) மொழி வழியாகவே தங்களை அடையாளம் காட்டிக் கொள்கின்றன. சீன மொழி பேசுபவன் சீனன்; உருசிய மொழி பேசுபவன் உருசியன்; வங்க மொழி பேசு

கிறவன் வங்காளி; தமிழ்மொழி பேசுபவன் தமிழன்; ஆகவே, தமிழ் வாழ்ந்தால்தான் நாம் தமிழர்களாக இருக்கமுடியும்; இல்லாவிடில் நாம் அடையாளத்தை இழந்து பரந்துபட்ட உலகில் கரைந்து உருத் தெரியாமல் போய்விடுவோம். தொன்மையான நம்முடைய நாகரிகம், பண்பாடு அனைத்தும் அழிந்துபோகும்.

நாளும் புதிய சொற்கள் ஆக்கப்படவும் வேண்டும்; அவற்றை மக்கள் வழக்கிற்குக் கொண்டுவரவும் வேண்டும். அப்பொழுதுதான் ஒரு மொழி காலத்தை வென்று நிற்கும். அரேபியாவிலிருந்து குதிரை வந்தது; உடனே நம் முன்னோர்கள் அதனுடைய அரேபியப்பெயரை நீக்கிவிட்டு; (அது குதித்து ஓடுவதைப் பார்த்து) அதற்குக் குதிரை என்று பெயரிட்டனர். குதித்து ஓடுவதால் அது குதிரை ஆனது. அப்படியானால் மிதித்து ஓடுகின்ற வண்டியை ஏன் மிதிவண்டி என்று அழைக்கக்கூடாது? ஆகவே; இனி மிதிவண்டி விற்பவர் 'சைக்கிள் ஸ்டோர்' என்று இருப்பதை 'மிதிவண்டி விற்பனையகம்' என்று மாற்றி எழுதவேண்டும்.

இப்பொழுதுதான் பலகை எழுதினோம்; அடுத்த ஆண்டு புதிதாக எழுதும்போது மாற்றி எழுதி விடுகிறோம் என்று தள்ளிப் போடாதீர்கள். ஏற்றுக்கொண்ட எந்த ஒன்றையும் உடனே செயல் படுத்த வேண்டும். எது எதற்கோ எவ்வளவோ செலவு செய்கிறோம். நம்முடைய மொழிக்காகப் பத்து முப்பது செலவு செய்யக்கூடாதா?

தமிழ் வாழ்க! அது வணிகர்கள் வாயிலாக வளர்க!!

இங்ஙனம்.

பழ. கருப்பையா,
(காந்தியத் தொண்டர் மன்றம்)
9, கண்டனூர் சாலை, காரைக்குடி.

பி.கு:—ஒவ்வொரு கடைப் பலகையையும் தமிழ்ப்படுத்தி அந்தந்தக் கடையில் எழுதிக் கொடுத்திருக்கிறோம். மேலும் உதவி தேவைப்பட்டால் மேல் காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்க.

## ம: ௨0௫: 'மொழி, இன, நாட்டு விடுதலைக்கு ஒரு வடிவம்......!

பேரன்புடையீர்! வணக்கம். நான் தென்மொழியைத் தொடர்ந்து ஐந்தாறு ஆண்டுகளாகப் படித்து வருகின்றவன்; தமிழக விடுதலைதான் இந்த மண்ணிற்கு ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும் என்ற கொள்கையில் நம்பிக்கையுடையவன். ஆனால் இக் கொள்கை சரியான வடிவம் பெறவில்லையே என்று நானும் வருந்தி வருபவன். இது தொடர்பான சில கருத்துகளைத் தெரிவிக்கவே இம் மடலைத் தங்களுக்கு எழுதுகிறேன்.

தாங்கள் தென்மொழியில், 'தமிழின முன்னேற்றம்', 'தமிழின ஒற்றுமை', 'தமிழர்களே ஒன்று படுங்கள்' என்ற வகையில் 'இன நலத்தை' வலியுறுத்தி எழுதி வருகிறீர்கள். 'இனம்' என்று எழுதும்பொழுது, ஒன்றைத் தாங்கள் தெளிவுபடுத்தவேண்டும். தமிழினத்தின் எந்த வகுப்பின் ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் தாங்கள் விரும்புகிறீர்கள்? எந்த வகுப்பு முன்னேறுவதால் தமிழகம் 'தலை நிமிரும்' என்று கருதுகிறீர்கள்? ஏனெனில் எந்தவோர் இனத்திலும் இரண்டு வகுப்புகள் உண்டு. முதலாளியமும், நிலக்கிழமையும் ஒழிக்கப்பட்டு, பொதுவுடைமைக் குமுகாய அமைப்பிற்கு அடித்தளம் அமைக்கப்படும் வரை உலகில் எந்தவோர் இனமும் 'ஓரினமாக' இருக்க முடியாது. இவ்வுண்மை தமிழகத்திற்கும் பொருந்தும். எனவே, சுரண்டும் வகுப்பையும், சுரண்டப்படும் வகுப்பையும் வேறுபடுத்திக் காட்டாமல், வெறுமனே 'தமிழர்களே, ஒன்று சேருவீர்!' என்ற முழக்கத்தை முன்வைப்பது முதலாளியத்திற்கும், நிலக்கிழமைக்குமே பயன் விளைவிக்கும். 'இனவொற்றுமை' என்பதை முதலாளியத்திற்கும், நிலக்கிழமைக்கும் எதிரான 'இனவொற்றுமை' என்று தெளிவுபடுத்தி, தென்மொழிக் கொள்கைக்குச் சரியான வடிவம் கொடுங்கள்.

'தமிழக விடுதலையே தமிழன் தமிழனாக வாழ ஒரே வழி' என்று கட்டம் கட்டித் தென்மொழியில் வெளியிட்டு வருகிறீர்கள். தமிழன் தமிழனாக வாழுவது என்பதின் பொருளென்ன? 'பார்ப்பனியத்திலிருந்து விடுபடுவதே' தமிழன் தமிழனாக வாழ்வது என்று தாங்கள் கருதுவீர்களானால், பார்ப்பனியம் எங்கு நிலை கொண்டிருக்கிறது என்பதை அறிந்து அப்பகுதியைத் தாக்கவேண்டும், பார்ப்பனியம் நிலைகொண்டிருப்பது நிலக்கிழமையிலே. நிலக்கிழமை ஒழிக்கப்படும் வரை பார்ப்பனியம் ஒழிபடாது. எனவே பார்ப்பனியத்தின் மேல் விழுகின்ற 'சம்மட்டி அடி' நிலக்கிழமையின் மேலும் விழவேண்டும்.

தமிழக விடுதலையைத் தங்கள் உயிர் மூச்சாகக்கொண்டு உழைத்து வருகிறீர்கள். வெறும் 'கை மாறுதல்' விடுதலை ஆகிவிடாது. தமிழகத்தின் அடிமை நிலை இதன் முதலாளிய, நிலக்கிழமை அமைப்பிலே அடங்கிக் கிடக்கிறது. எனவே, இவ்வமைப்பைச் சுக்கு நூறாக்குவதின் வழிதான் உண்மை விடுதலையைப் பெற முடியும். மேலும், தமிழக விடுதலை என்ற முழக்கத்தை முன்வைக்கும்பொழுது, தமிழகம் உள்ளிட்ட 'இந்தியா' என்ற இவ்வமைப்பு வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளிகளின் சுரண்டல் நலனுக்காக உருவாக்கப்பட்ட ஒன்று என்பதைத் தெளிவுபடுத்தி, இவ்விந்தியாவை உடைப்பதில்தான் பாட்டாளி வகுப்பின் நலன் அடங்கியுள்ளது என்ற உண்மையை வெளிப்படுத்த வேண்டும். "தமிழக விடுதலை' என்ற முழக்கத்திற்கு, 'சுரண்டல் நலனுக்காக

உருவாக்கப்பட்ட இந்தியாவிலிருந்து விடுதலை' என்ற வடிவத்தைக் கொடுங்கள்.

தங்கள் கொள்கைகளுக்கு மேற்கண்ட வடிவங்களைக் கொடுப்பீர்களானால், தங்கள் காலத்திலேயே இக்கொள்கைகள் வெற்றிபெறுவதைக் காணமுடியும். மேலும், இக்கொள்கைகளை நடைமுறைப் படுத்திட ஓர் இயக்கத்தையும் தாங்கள் அமைத்திட வேண்டும். ஏனெனில், எந்தவொரு கொள்கையும் ஒரு புரட்சி நிறை இயக்கமின்றி வெற்றிபெற முடியாது. தமிழகத்தில் உள்ள புரட்சி உள்ளங்களை ஒன்றுபடுத்தி ஓர் இயக்கத்தைக் கண்டிடுங்கள். புரட்சித் திருவே! மேலே நான் காட்டிய உண்மைகளைத் தாங்கள் அறியாதவர்களாக இருக்கமுடியாது. 'எல்லார்க்கும் எல்லாம் என்கின்ற பொதுமைத் தமிழகத்தைக் காண விரைந்து செயல்படுங்கள். புரட்சி வெல்லட்டும்! பொதுமை பூக்கட்டும்!!

—மீனவன், கோவை-18.

## ம: 206: இந்தித் திணிப்பை எளிதாகக் கருதவேண்டா ......!

செந்தமிழ் உருவாய பாவலரேறு அவர்களுக்கு,

வணக்கம். இந்தியை எதிர்த்து அழியாப் புகழ்பெற்ற நந்தமிழ் மறவர்களுக்குத் தமிழ் நானூறு படைத்தவர்கள் தாங்கள். 65-க்குப் பின் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களைத் தென்மொழி மூலமும், கனல் பறக்கும் துண்டு வெளியீடுகள் மூலமும் நடத்தியவர்கள் தாங்கள். அனைத்துக் கல்லூரி மாணவத் தலைவர்களுக்கெல்லாம் வீரவுரை முழக்கியவர்கள் தாங்கள். அப்போராட்டங்களால் அரசு அலுவலை விட நேர்ந்தாலும், தோளும் துணிவும் துணைக்கொண்டு அயராமல் தொண்டாற்றும் நெஞ்சுரம் தங்களுடையது! இன்றைக்கு ஆளும் தமிழரசு இரு மொழிக் கொள்கையினை ஏற்று இந்தியைத் துரத்தியது. என்றாலும் இந்தி மீண்டும் தனதுருவைக் காட்டத் தொடங்கியுள்ளது. சென்ற இதழ் சிறப்பு மடலில் மீண்டும் இந்திப்பேய்த் தாண்டவம் ஆடத் தொடங்கியிருப்பதை வெளியிட்டுள்ளீர்கள். இந்தி நெடுநாட்களாக நடுவணரசால் பொது மொழி என்று பேசப்படுவதோடு, இந்தி படிப்பவர்க்குத் தனிச் சலுகைகளும் உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகின்றன. தென்னிந்திய இந்திப் பரப்பு அவையும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறெல்லாம் இந்தியை நுழைத்து வருவதற்கிடையில் இன்றைய நடுவணரசுக் கல்வி அமைச்சர் பேராசிரியர் நூருல்காசன் 'ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பெறவேண்டும்' என்று கூறியிருக்கிறார். இக்கருத்தை மைசூர் பல்கலைக் கழக இணைக் கண்காணகர்

பேராசிரியர் திரு. தி. சவரிகௌடா வன்மையாகக் கண்டித்திருக்கிறார். ஒருபோதும் ஆங்கிலத்தின் இடத்தை இந்தி அடையமுடியாது என்றும், வட்டார மொழிகளே அந்த இடத்தை அடையமுடியும் என்றும், விந்திய மலைக்குத் தெற்கே இந்தி மொழியைப் புகுத்தும் எண்ணத்தைக் கைவிடவேண்டும் என்றும், தென்னாட்டில் இந்தியை எதிர்க்கும் ஒரே தலைவர் தமிழக முதலமைச்சர் கருணாநிதி தான் என்றும், இந்தித் திணிப்புக்கு எதிராக மக்கள் எச்சரிக்கையாக இருந்து வரவேண்டும் என்றும், அப்பெருமகனார் எடுத்துரைத்திருக்கின்றார். அண்டை மாநிலத்துக்காரர் எதிர்ப்பினைக் கிளப்பும் போது, நாமும் எச்சரிக்கையாக இருந்து வரவேண்டியது உறுதியாகிவிட்டது. வந்தபின் கூச்சலிட்டுப் பயனில்லை.

தமிழக அரசு மற்ற தென்னாட்டு மாநில அரசுகளோடு தொடர்பு கொண்டு மாநாடு கூட்டி, எதிர்ப்பினைத் தெரிவிக்க முனைந்தால் பயன் விளையுமன்றோ! இந்தி தலைகாட்ட அஞ்சியோடுமன்றோ! மைசூர் பல்கலைக் கழக இணைக்கண்காணகர் நெஞ்சக் கனல் பிற பல்கலைக் கழகத்தவர்க்கும் இருக்குமானால் நடுவணரசு பேச்செடுக்குமா? கன்னடப் பல்கலைக் கழகம் எதிர்ப்பினைக் கிளப்பியிருக்கையில் நம் பல்கலைக் கழகத்து இணைக்கண்காணகர்கள் வாயைத் திறந்து ஏதேனும் சொல்லியிருக்கிறார்களா? அல்லது தமிழ்த்துறை பேராசிரியன்மார்களாவது எண்ணியிருக்கின்றார்களா? நமது மாநிலத்தில் இந்தியே இல்லாதபோது, ஏன் பேசவேண்டும் என்று அனைவரும் எண்ணுகிறார்களோ என்னவோ? ஆனால் ஒன்று, பக்கத்தில் எரியும் தீ பச்சை மரத்தையும் மெல்லப் பதம்பார்க்கத் தவறாது என்னும் உண்மையை மறந்து விடக்கூடாது.

நடுவணரசின் செயல் முறைகள் கட்டாய இந்தித் திணிப்புக்கு அணியமாகிக் கொண்டிருக்கின்றன என்பதை உணர வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் அனைவர்க்கும் இந்த உண்மையை எடுத்துரைப்பது நமது கடமையாகிறது. தென்மொழி தொடக்கக் காலத்திலிருந்தே எதிர்த்து வந்திருக்கிறது. இனியும் எதிர்க்கவேண்டிய நிலையில் இருக்கிறது. அடிபட்டோடிய நரி அண்டி அடங்கியிருந்து கிளம்புவதுபோல துரத்தப்பட்ட இந்தி நுழைந்தாலும் நுழையலாம். சென்ற இதழில் அன்பர் சிறப்பு மடலில் வேண்டியிருந்தது போல ஆவன செய்வது எரி முன்னர் காப்பதுபோல ஆகும். இல்லையேல், வருமுன்னர் காவாத பழிக்கு ஆளாக வேண்டியவர்களாவோம்.

—அ. பொன்னையன், தொட்டியம்.

# ஆரியப் பார்ப்பானின் மொழிக் குறும்பு!

### ஓர் எடுத்துக்காட்டு

ஆரியப் பார்ப்பான்—அவன் சீரங்கத்தில் **'தர்ப்பைப் புல்'** ஏந்தும் நடராச அய்யனாக இருந்தாலும் சரி, கோயங்காவின் நிழலில் வாழ்ந்து எழுதியே பிழைக்கும் 'சிவராம' அய்யனாக இருந்தாலும் சரி—தமிழ் மொழியின் சிறப்பைக் கெடுத்து, அம்மொழியில் 'அவாளுக்கு' மிக இனிப்பான 'சமசுக்கிருத'ச் சொற்களைக் கலந்து எழுதவோ, பேசவோ செய்யவில்லையானால், வாழ்க்கையில் ஒரு நிறைவே இருக்காது! நம் வீடண, 'பக்தவத்சல', 'சுப்பிரமணிய', 'கண்ணதாசன்'களுக்கும், 'அவாளுக்கு'ப் பக்கமேளம் கொட்டிப் பேசவில்லையானால் தூக்கமே வராது !

சென்ற (சூன்) மாதம், 'நம்' கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் நாகர்கோவிலில், அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழ் ஆசிரியர் கழக மாநாட்டைத் தொடக்கி வைக்கையில் ஒரு கருத்தைச்சொன்னார். அஃதாவது,

**"அறிவியல், தொழில் நுட்பம் போன்ற பாடங்களைப் பயிற்றுவிக்கும் பொழுது, தமிழ்மொழியில் பிறமொழிச் சொற்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்" — என்பது** அவர் கூறிய செய்தி,

இச்செய்தி பூணூல் சிவராமன்களுக்கு மிக இனிக்கின்ற செய்தி. உடனே,

"தமிழ் மொழியில் அந்நியச் சொற்கள்", "தமிழ்நாட்டுக் கல்வி மந்திரி வரவேற்கிறார்" என்று தினமணியில் செய்தி வந்தது.

இதைக் கல்வியமைச்சர் நெடுஞ்செழியனார் கவனிக்கவேண்டும். அவர் பேசிய பேச்சு ஒருவகைப் பொருள் தருவதானாலும், அவர்கள் அச்செய்தியால் என்ன விளைவை ஏற்படுத்த விரும்புகின்றனர் என்பதைத்தான் அமைச்சர் கவனிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்.

அந்தச் செய்தியைத் தினமணி வெளியிட்ட முறையைப் பாருங்கள் :

# தமிழ் மொழியில் அந்நியச் சொற்கள் !

த. நா. கல்வி மந்திரி வரவேற்கிறுர்.

நாகர்கோவில், ஜூன் 10—விஞ்ஞானம், தொழில் நுட்பம் போன்ற பாடங்களை போதிக்கும் போது, தமிழ்மொழியில் அன்னிய மொழி வார்த்தைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்று த. நா. கல்வி இலாகா மந்திரி நெடுஞ்செழியன் இன்று அ-இ பல்கலைக் கழகத் தமிழ் ஆசிரியர்கள் சங்கத்தின் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறிஞர்.

தமிழ் இலக்கணம், இலக்கியம் முதலியவைகளை மேற்கொண்டு அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியமில்லை. தமது மொழிகளை மேலும் வளப்படுத்துவதற்காக, ரஷியாவும், ஜப்பானும், விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளில், பிற மொழி வார்த்தைகளை சேர்த்துக் கொண்டிருக்கின்றன. அந்த உதாரணத்தை நாமும் பின்பற்றவேண்டும் என்ருர். அதே சமயத்தில், விஞ்ஞானம், கணிதம் மற்றும் இதர பாடங்களைத் தாய் மொழியிலேயே கற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் அவர் வற்புறுத்திஞர்.

—இதுதான் தினமணிச் செய்தி.

—இதில் இனிக் கவனிக்கவேண்டியவை இவை:

(1) கல்வியமைச்சர் பேசிய கருத்து "அறிவியல் சொற்களைத் தமிழில் அப்படியே கையாளலாம்" என்பதேயாகும். ஆனுல் அக் கருத்தைத் "தமிழ்மொழியில் அந்நியச் சொற்கள்" என்று தலைப்பிட்டுத் தமிழில் கலப்புச் செய்வதை அமைச்சர் வரவேற்பது போல் காட்டியது 'பார்ப்பனக் குறும்பு'.

(2) பிறமொழிச் சொற்கள் என்பதை அந்நியச் சொற்–கள் என்று வேண்டுமென்றே எழுதியது ஆரியக் குறும்பு !

(3) கல்வி அமைச்சர் என்று எழுதுவதை (மந்திரி என்பது சமற்கிருதச் சொல் என்று நினைத்துக்கொண்டு), கல்வி மந்திரி என்று எழுதியது ஆரியப் பார்ப்பனக் குறும்பு ! (மந்திரி என்பது தூய தமிழ்ச் சொல்லே என்னும் ஆராய்ச்சிக்கு நாம் இப்பொழுது போக விரும்பவில்லை).

(4) 'ஜூன்' என்பதைத் தமிழ் இலக்கணப்படி, 'சூன்' என்று எழுதுதல் வேண்டும். 'தமிழ்' என்பதை ஆங்கிலத்தில் 'TAMI-ழ்' என்று எழுதாமல் 'TAMIL' என்று அம்மொழி மரபுக் கேற்ப எழுதுவதுபோல், ஜூன்' என்பதையும் 'சூன்" என்றே தமிழ் மரபுக்கேற்ப எழுதுதல் வேண்டும். (ஆனால் நம் இனக் கோடரிக் காம்புகளும்; விடண முண்டங்களும் நடத்தும் இதழ்களிலேயே இவ்வாறு எழுதப்பெறும் பொழுது, சிவராம 'அய்யர்கள்' சும்மா விடுவார்களா ? இல்லாதுபோனால் அவர்கள் மேனியில் புரளும் பூணூலுக்குள்ள பெருமைதான் என்ன?)

(5) அடுத்தது, விஞ்ஞானம் என்னும் சொல் பத்து ஆண்டுகளுக்கு முன்பே தூக்கியெறியப்பட்ட சொல், 'அறிவியல்' என்பதை ஐந்தாம் வகுப்பு மாணவனும் படித்து வருகிறான். அப்படியிருக்க அறிவியலை 'விஞ்ஞானம்' என்று வேண்டுமென்றே எழுதுவது நீரை 'ஜலம்' என்று விடாப் பிடியாய் எழுதிக்கொண்டிருப்பது போலும் சிவராமக் குறும்பே!

(6) போதிக்கும் என்ற சொல் போய், பயிற்றுவிக்கும் என்னும் தூய தமிழ்ச்சொல் புழக்கத்திற்கு வந்து, எல்லாராலும் கையாளப் பெற்று வரும்பொழுது, இந்தச் சிவராம அய்யருக்கு மட்டும் என்ன வந்தது? (அந்த ஆளைச் சொல்லி மட்டும் குற்றம் தீர்ந்து போகாது. நம் ஆதித்தன்களும், கண்ணதாசன்களும், 'விடுதலை' 'வீரமணி'களும், பொதுமக்களுக்கு விளங்கவைக்க வேண்டும் என்று அப்படித்தானே எழுதி வருகிறார்கள். அதற்கு எங்கேபோய் முட்டிக்கொள்வது. நம் தி. க. காரர்களுக்கு இனத்தில் பார்ப்பனீயம் வேண்டாமாம்; மொழியில் மட்டும் அவனில்லாமல் நடக்காதாம்! அதென்ன பார்ப்பனீயச் சூத்திரத் தன்மையோ நமக்கு விளங்கவில்லை.)

(7) இனி, செய்திக்கு வருவோம். 'பாடங்களை போதிக்கும்' என்று தினமணி எழுதுகிறதே. 'பாடங்களைப் போதிக்கும்' என்பதுதானே சரி. Indian Express-இல் சிவராமன் இப்படி ஆங்கிலத்தைத் தப்பும் தவறுமாக எழுதுவதை விரும்புவாரா ? பின் ஏன் தமிழில் மட்டும் இந்தத் தவறுகளைச் செய்கின்றார், இதுதான் அக்ராகரக் குறும்பு!

(8) பிறமொழி என்றால் நம் தமிழ்ப் 'பாமரர்'களுக்கு விளங்காதாம். எனவே, 'அன்னிய' மொழி என்று எழுதுகிறதுகள்.

போகட்டும்; அந்தமட்டில் விட்டதுகளே! 'அன்னிய பாஷை'— என்றெழுதாமல்! அந்த அளவுக்கு நமக்கு வளர்ச்சிதான். அது சரி, நம் தி. க. காரர்களும், தி. மு. க. காரர்களும் இன்னும் 'அவாள்' கருத்துப்படி 'பாமரர்' கள்தாமோ? 'அப்படி நாங்கள் இல்லை' என்று 'அவாள்' உச்சிக் குடுமியில் உரைக்கும்படி சொன்னால் என்ன? ஓ....ஓ... உச்சிக் குடுமி இருந்தால்தானே !

(9) இனி, 'சொற்கள்' என்றால் நம்மவாளுக்குத் தெரியாதாம்; எனவே, வார்த்தைகள் என்று 'எழுதறதுகள்'. எல்லாம் நம்மவாளுக்குத்தானே, அவாள் தமிழ் 'எழுதறதும்' 'படிக்கிறதும்'. அவாளுக்குத்தான் 'இங்கிலீசு' இருக்கிறதே !

(10) 'அவசியம்' இன்னும் போகவில்லை. 'தேவை' இன்னும் நமக்கு வரவில்லை. இஃது அம்மாமிக் குறும்பு !

(11) கல்வித்துறை, பொதுப் பணித்துறை, காவல் துறை என்றெல்லாம் புழக்கத்துக்கு வந்து தண்ணீர்பட்ட பாடாகப் போன பின்னால்கூட, "இலாகா" என்று எழுதுவதைப்பற்றி என்ன சொல்ல ? இதுதான் அய்யராத்துக் குறும்பு !

(12) 'தமிழாசிரியர் கழகம்' என்பதால் தம் 'இப்பித் தனம்' போய்விட்டால் என்ன செய்வது? எனவேதான், 'தமிழாசிரியர்கள் சங்கம்' என்று எழுதுகிறார்கள். இதுதான் 'துக்ளக்' குறும்பு !

(13) தொடக்கி வைத்துப் பேசினார் — என்று எழுதினால் தமிழ் வளர்ந்து விடாதா ? அதைக் கெடுத்துப் 'பிராமணக் கருமத்தை' நிறைவேற்ற வேண்டாவா? எனவேதான், ஆரம்பித்து வைத்துப் பேசினார் என்று 'அவாள்' எழுதுவது. இது கல்கிக் குறும்பு !

(14) 'முன்னேற்றம்' என்று சொல்வதில் இரண்டு தடையிருக்கிறது, பார்ப்பனருக்கு! தமிழ் முன்னேறி விடக்கூடாது என்பது ஒன்று ! முன்னேற்றக் கழகத்திற்குப் பெருமை வந்து விடக்கூடாது என்பது ஒன்று. இந்த இரண்டையும் எண்ணிக் கொண்டுதான், 'முன்னேற்றம்' என்று 'பூணூல்கள்' சொல்வதைவிட 'அபிவிருத்தி' என்று சொல்வதில்தான் மகிழ்ச்சி அதிகம்.

மதுரையில் நடந்த இரண்டாவது தென்மொழிக் கொள்கை மாநாட்டைக் கூட, 'தென்மொழி அபிவிருத்தி மாநாடு' என்று அவர்கள் எழுதி மகிழ்ச்சியடைந்தனர். இதுதான் அவர்களின் ஆனந்த விகடக் குறும்பு!

(15) 'வார்த்தைகள்' என்பதைச் 'சொற்கள்' என்று எழுதாத தினமணியா ரஷியா, ஜப்பானை—உருசியா, சப்பான் என்றெழுதப் போகின்றது? இந்த வகையில் நம் விடுதலை, முரசொலி, தினத் தந்திகள் திருந்துவதே இத்தலைமுறையில் நடக்குமா என்பது ஐயம். தினமணி, சுதேசமித்திரன்களை எதிர்பார்க்கலாமா? இதுதான் அவர்களின் பிராமணக் குறும்பு ஆயிற்றே!

(16) 'எடுத்துக்காட்டு' என்னும் சொல் பள்ளியில் படிக்கும் இரண்டாம், மூன்றும் வகுப்பு மாணவனுக்கெல்லாம் புழக்கத்திற்கு வந்த சொல். ஆனால், 'உதாரணத்தை'ப் பார்ப்பனர்கள் விடமாட்டார்கள் என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு. இது சாமிநாதய்யர் குறும்பு!

(17) 'இதர' என்பதற்குப் 'பிற' என்று எழுதிவிட்டால், பூணூல் அறுத்த பார்ப்பானை, அக்ராகரம் மதிக்காததுபோல், தினமணியை அவர்கள் மதிக்கமாட்டார்கள். எனவே. இஃது அவர்களின் குலக் குறும்பு!

(18) மொத்தம் இச்செய்தியில் வந்துள்ள 84 சொற்களில் 23 சொற்கள் கலப்புச் சொற்கள். ஏறத்தாழ நான்கில் ஒருபகுதி கலப்புச்சொற்கள், ஆனால் அந்த 23 சொற்கள்தாம் முகாமையான சொற்கள்; சிறப்புச் சொற்கள். மீதியெல்லாம் பொதுச் சொற்கள்; உரி, இடைச்சொற்கள். மொத்தத்தில் தமிழின் முதுகெலும்பை ஆரியமாகவும், அதன் சிற்றுறுப்புகளைத் தமிழாகவும் சுட்டி, ஆரியத்தின் உதவியின்றித் தமிழ் இயங்காது என்பதை வழி வழியாக மெய்ப்பித்துக் கொண்டு வரவேண்டுமென்பதே அவர்களின் கொள்கை. இதை நம்மவர்கள் அறியாமலோ அறிந்தோ ஏமாறித் தம்மையும், தங்கள் மொழியையும் தாழ்த்திக்கொண்டு, பார்ப்பனியத்திற்கு என்றென்றும் அடிமையாகக் கிடக்கின்றார்கள்.

இறுதியாக, அந்நிலையினின்று நீங்கும் வரை நெடுஞ்செழியன் போலும் பொறுப்புள்ள அமைச்சர்கள் மிக விழிப்பாகக் கருத்தறிவிக்க வேண்டும். அவர் கூறுவதாக வெளிவந்துள்ள கருத்து எந்த அளவில் உண்மை என்றே தெளிவாகத் தெரியவில்லை. எனவே, அதைப்பற்றி நாம் இங்கு ஆராய விரும்பவில்லை. O

தொடர்-4

# அறிவியல் நெறிமுறை வரையறைகள் - பூதநூல்.

இல. க. இரத்தினவேல்,
பூதவியல் துறை; பெரியார் கல்லூரி, திருச்சி-20.

## 3. விசை நிலைப்பியல். (STATICS)

1. தொகுனி (Resultant).

ஒருபொருள் மீது செயற்படும் பலவிசைப்
பயனை அளித்திடும் ஒருவிசை தொகுனி.

2, சமனி (Eguilibrant).

பலவிசைக்(கு) உட்படும் துகளை நிலைப்பில்
இருத்தும் ஒருதனி விசையே சமனி.

3. இணைகர விசை நெறி (Law of Parallelogram of Forces): புள்ளி ஒன்றிற் செயற்படும் இரண்டு விசைகளை அப் புள்ளியிலே சந்திக்கும் இணைகரம் ஒன்றின் அடுத்துள்ள பக்கங் களாய் திசையிலும், அளவிலும் குறிப்பின், அதன் மூலைவிட்டம் தொகுனியை (Resultant) திசை, அளவால் குறிக்கும்.

(குறள்வெண் செந்துறை)

புள்ளிஒன் றிற் செயற்படும்இ ரண்டுவிசை களையப்
புள்ளியிலே சந்திக்கும் இணைகரம்ஒன் றின்அடுத்
துள்ளபக்கங் களாய்த்திசையில் அளவில்குறிப் பின்அதன்
மூலைவிட்டம், தொகுனிதனைத் திசை, அளவால்குறிக்கும்.

4. விசைகளின் முக்கோண நெறி (Triangle law of Forces) - துகளில் செயற்படும் மூன்று விசைகள், திசை அளவால் ஒரு முக்கோணத்தின் முப்பக்கங்களாய் வரிசை முறையில் முறையாய்க் குறிக்க முடிந்தால் விசைகள் துகளைச் சமநிலையில் இருத்தும்.

(பல விகற்பக் கட்டளைக் கலித்துறை)

துகளிற் செயற்படும் மூன்று விசைகள் திசையளவால்
ஒருமுக்கோ ணத்தின்முப் பக்கங்க ளாய்வரி சைமுறையில்
முறையாய்க் குறிக்க முடிந்தால் விசைகள் சமநிலையில்
துகளை இருத்தும் எனும்முக் கோண விசைநெறியே!

5. முக்கோண விசைநெறியின் வாற்றலை (Converse): செயற்படும் மூன்று விசை துகள் ஒன்றைச் சமநிலையில் இயற்படுத் தின் செயற்பட்ட விசைகள் திசை, அளவால் ஒரு முக்கோணத்தின் பக்கங்களாய் வரிசை முறையில் முறையாய்க் குறிக்கலாம்.

(பல விகற்பக் கட்டளைக் கலித்துறை)

செயற்படும் மூன்று விசைதுகள் ஒன்றைச் சமநிலையில்
இயற்படுத் தின்செயற் பட்ட விசைகள் திசைஅளவால்
ஒருமுக்கோ ணத்தின்முப் பக்கங்க ளாய்வரி சைமுறையில்
முறையாய்க் குறிக்கலாம் என்பது முக்கோண வாற்றலையே!

6. இலாமியின் தேற்றம் (Lami's theorem) : மூவிசைச் செயலால் சமநிலை (equilibrium) அமையின், ஒவ்வொரு விசையும், மற்ற இரண்டுக்கு இடைக்கோண நெடுக்கைக்கு (sine of the angle between the other two Forces) நேர்த்தகவு உடையது.

இலாமியின் தேற்றம் இயம்புவ தாவது :
மூவிசைச் செயலால் சமநிலை அமையின்
ஒவ்வொரு விசையும் மற்றஇரண் டுக்கிடைக்
கோண நெடுக்கைக்கு நேர்த்தக வுடையது.

7. விசையின் சுழலம் (Moment of a force) ;

புள்ளியைப் பற்றிய விசையின் சுழலம்
புள்ளியைப் பற்றிச் சுழற்றும் திறனே !
விசையின் சுழல மதிப்பு விசைச்செயற்
கோட்டுக்கும் புள்ளிக்கும் இடைப்படும் தொலைவை
விசையின் அளவால் பெருக்கக் கிடைக்கும்.

8. இரட்டை அல்லது பிணையல் (Couple): இரு வேறு செயற்கோட்டு (line of action) வழிப்படும் இரண்டு எதிர் இணை விசைகளின் அமைப்பு இரட்டை எனப்படும்.

இருவேறு செயற்கோட்டின் வழிப்படும் இரண்டெதிர்
இணைவிசை களின்அமைப் பிரட்டை எனப்படும்.

9. இரட்டையின் சுழலம் (Moment of a Couple) :

எதிர்இணை விசைகளின் இடைத்தொலை வால்விசை
ஒன்றைப் பெருக்குதல் இரட்டையின் சுழலம்.

10. ஒருதள இணைவிசைச் சமநிலைத் தகுதி :

ஒருதள இணைவிசை அமைப்புக் குட்படும்
பொருளின் சமநிலைத் தகுதிகள் ஆவன :
ஒன்றே விசைகளின் கூடுதல் சுழியாக வேண்டும்.
இரண்டே, விசைகளின் தளத்தில்எப் புள்ளியைப் [பற்றிய
சுழலக் கூடுதல் சுழியாக வேண்டும்.

11. இலகு எந்திரம் (Simple Machine) : ஓர் இடத்தில் செலுத்தும் விசை வேண்டிய வேறிடத்தில் அளவினிலோ, திசை

யினிலோ அன்றி இரண்டிலுமோ மாறிவரும் அமைப்பு இலகு எந்திரம் எனப்படும்.

12. எந்திரப் பயன் (Mechanical advantage): எடைக்கும் (Load) முயற்சிக்கும் (Power) உள்ள தகவு எந்திரத்தின் பயனும்.

13. கதித் தகவு (Velocity ratio): குறித்த ஒரு நேரத்தில் எடைப்புள்ளி நகர் தொலைவுக்கும், முயற்சிப் புள்ளி நகர் தொலைவுக்கும் உள்ள தகவே கதித் தகவு.

14. எந்திரத்தின் திறன் (Efficiency); எந்திரத்தின் திறன், அதனில் செலுத்துகின்ற வேலைக்கும் அதனால் பெறுகின்ற வேலைக்கும் உள்ள தகவு ஆகும்.

(இரட்டைக் குறள்வெண் செந்துறை)

ஓரிடத்திற் செலுத்தும்விசை வேண்டியவே றிடத்தில்
அளவினிலோ திசையினிலோ அன்றிஇரண் டிலுமோ
மாறிவரும் அமைப்(பு) இலகு எந்திரம்ஆம்; எடைக்கும்
முயற்சிக்கும் உள்ளதக(வு) எந்திரத்தின் பயனும்
குறித்தவொரு நேரத்தில் எடைப்புள்ளி முயற்சிப்
புள்ளிநகர் தொலைதகவே கதித்தக(வு)எந் திரத்தின்
திறன்அதனில் செலுத்திவிட்ட வேலைக்கும் அதுபின்
தந்தபயன் வேலைக்கும் உள்ளதக(வு) ஆகும்,

—[தொடரும்]

## செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகம்.

செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகத்தில் சேர்வதற்கு விளக்கம் வேண்டியும், பங்குகள் கேட்டும் அன்பர்கள் பலரிடமிருந்தும் மடல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இக் கூட்டுறவுக் கழகத்திற்கான அடிப்படை ஆக்க முயற்சிகளும், சட்ட நெறிமுறை வரைவுகளும், பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் முறைப்படி மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. அதன்பின் விரிவான அறிக்கைகள் வெளிவிடப் பெறும். அதற்குள் தங்கள் பங்குத் தொகையினை விடுக்க விரும்பும் அன்பர்கள், தாம் எடுத்துக்கொள்ள விரும்பும் பங்குகளுக்கான தொகையுடன் சேர்ப்புக் கட்டணம் ஓர் உருபாவும் சேர்த்துத் தம் முழு முகவரியுடனும் விளக்கத்துடனும் 'தென்மொழி' சென்னை-5 என்னும் முகவரிக்கே விடுத்து வைக்கவும். ஒரு பங்கு ஓர் உருபா. ஒருவர் எத்தனைப்பங்குகள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தேவையான பங்குகள் விரைந்து நிறைவாகி வருகின்றமையால் அன்பர்கள் முந்திக் கொள்வது நல்லது.

25—9—74
சென்னை-5.

பெருஞ்சித்திரன்,
அமைப்பாளர்.

ளாகத் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது! ஒருவேளைச் சோறும் பொந்திகையாய் உண்ணப் பெறுமல் அரைவயிற்றுக் கஞ்சி குடித்து இரவில் படுத்துக்கொள்ளும் காட்சியைக் கண்ணாரக் காண நேரிட்டு உள்ளங் கவல்கிறது வேலையிருந்தாலன்றோ அவர்களுக்கு ஏதாகிலும் கூலி கிடைக்கும். வேலையும் இல்லை. பெரும்பாலான குடும்பங்களில் பெண்கள் விறகு பொறுக்கச் சென்று, நாள்தோறும் $1\frac{1}{2}$ உருபாவுக்கு விற்றுக்கிடைப்பதில் வயிறு வளர்க்கின்றனர். இவர்களின் நிலைமையைக் கேட்பாரில்லை. அரசு ஊழியர்களாகிலும் எங்ஙனமேனும் போராட்டம் நடத்தி, அக விலைப்படி, உயர்வு, நன்னர் (Bonus) வாங்கிவிடுகின்றனர். அவ்வேழை மக்களுக்கு யார் அகவிலைப்படி உயர்வு கொடுப்பதென்று தெரியவில்லை. உழைத்துழைத்து ஒய்ந்து போகும் நிலையில் உள்ளவர்களைக் கேட்க யாருமில்லை. புனைவு, போலிகளிலே கற்றவர்--கள் என்று இன்று சொல்லிக் கொள்பவர்கள் காலந் தள்ளுகின்றனர். இன்னும் என்னென்ன விளைவுகள் ஏற்பட இருக்கின்றனவோ? இந்நிலையில், சங்கராச்சாரி ஓலங்கள் தாம் நாள்தோறும் வந்தவண்ணமிருக்கின்றன. இவ்வாண்டு வெங்காலூரில் சமற்கிருத மாநாடு நடக்க இருக்கிறதாம். பல்வேறு இடங்களிலிருந்து அறிஞர்கள், அமைச்சர்கள் கலந்துகொள்ள இருக்கின்றனராம். நாம் உலகத் தமிழ்க் கழக மாநாடு ஒன்று நடத்தினாலும், அமைச்சர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டாலும், கட்சிக் கண்ணோட்டம் இல்லையாகின் பாராமுகமாகி விடுகின்றனர். என்னே அவர்தம் தமிழ்ப்பற்று! 'மறைமலையடிகளாரின் செய்யுள் மாண்பினைக் கோடிட்டு அழகாகக் காட்டியுள்ளீர்கள். அன்னாரின் செய்யுள் நூல் புலமை தற்பொழுதே நான் அறிய நேர்ந்தது. தங்களின் சிங்கைச் சுற்றுச்செலவு தமிழகத் தாளிகைகள் எந்த அளவிற்கு இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக உணரமுடிந்தது. ஆனால் சிங்கையின் செய்தித் தாள்கள் நல்லமுறையில் வெளியிட்டிருந்தன. அவர்களின் தமிழ் உணர்வு நன்கு புலப்படுகின்றது. 'நூறாசிரியம்', 'என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்'. 'சிங்கைச் செலவு'— தொடர்ந்து வெளியிடுங்கள். படிக்கப்படிக்க அறிவு ஊற்றுப் பெருக்கெடுத்தோடும் இன்பச்சுனை நூறாசிரியம்.!

குழந்தை-ஈகவரசன், இளநிலைப் பொறியாளர், அரியலூர்.

**0 : 459 :** "தமிழ்க்குரி யோயே! தமிழ்க்குரி யோயே!
அமிழ்த்திடும் பகைஞர் அன்றுடம் வளர
சிமிழ்த்தெழும் நெஞ்சத் தமிழ்க்குரி யோயே!
வஞ்ச வடவர் இந்தியினை அறுபத்
தைந்தினில் எதிர்த்தே அடைந்தனை சிறையே!
திருச்சி நகரில் தென்மொழிப் பகைவர்
மருட்சி யடைந்திட மாநா டெடுத்தனை!
மதுரைக் கூடலில் தமிழர் மதர்ந்தெழ—
எதிரிகள் சோர்ந்திட—எடுத்தனை பிறிதே!
இன்னும் தமிழுக் கிழைத்திடுந் துயர்கள்
உன்னி யுன்னி உள்ளந் துடிக்குவை!
எண்ணிய செயல்கள் எந்தாய் நடந்திடக்
கண்ணியக் கட்டுடற் காளையர் தேறுவை!

—(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

குருதியும் நரம்பும் கொதிக்கவும் புடைக்கவும்
கருவியா யிங்கோர் காளையு முண்டே !
நாளும் நற்றுணை யாகக்
கேளும் கிளையும் கிளர்க்குமென் நெஞ்சே !

—க. தமிழமல்லன், புதுவை-9.

**0 : 460 :** அன்புடைய ஐயா, தங்களின் புதுவை வருகையின் பொழுது, பாவேந்தர் விழாவினில் கலந்து கொண்டதும், அன்று காலையில் தமிழ்த் தொண்டர் ஒன்றியத்தினைத் தொடக்கி வைத்துப் பேசியதும், புதுவைத் தமிழன்பர்களின் நெஞ்சினைத் தொட்ட நிகழ்ச்சிகளாய் அமைந்து ஓர் எழுச்சியினைப் புதுவை அன்பர்களிடையே உருவாக்கியுள்ளன. தங்கள் பேருரையினைச் செவி மடுத்த **திருமுடி சேதுராமன்** அவர்கள் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) தம்மில்லத்தில் பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகள் நடந்திருந்தும், தங்கள் உரைக்கு நிகராக வேறுயாரும் உரையாற்றக்காணேன் என்று பாராட்டித் தங்களைச் சிறப்பித்தது, இனி, தங்களுடைய கொள்கைகளும், பேராண்மையும், நல்லுள்ளம் கொண்ட அனைவராலும் பாராட்டிப் பின்பற்றப்படும் என்பதற்குச் சான்றாக அமைந்திருந்தது. —அரிமா. இளங்கோ, செயலர். உ.த.க., புதுவை.

**0 : 461 :** மதிப்பிற்குரிய ஆசானுக்கு, வணக்கம். தமிழ்ப் பற்றுள்ளவனாக மட்டில் இருந்து. தந்தை பெரியார், திரு. அண்ணா அவர்கள் காட்டிய கொள்கை வழி நின்று, வினைப்பட்டு வந்த எனக்குக் கடந்த இரண்டாண்டுகளாகத் தங்களால் வெளியிடப்படும் 'தென்மொழி' தனித்தமிழ் அறிவூட்டி வினையாற்றல் தந்து வருகிறது கண்டு, என் உள்ளம் இறும்பூதெய்துகிறது ! செந்தமிழ் தனித்து இயங்க, தமிழன் தமிழனாக வாழ, தமிழ் நிலம் காக்கப்படத் தங்கள் கொள்கைதான் மிக விரைவில் செயல்பட்டுத் தமிழன் விடுதலை பெறமுடியும் என்பது எனது ஆழமான கருத்து. தாங்கள் பலமுறை புதுவை வந்து ஆற்றிய அந்த ஈடு இணையற்ற உரைகள், ஒவ்வொரு நிமையமும் புதிய உணர்வு அளித்து என்னை வழிநடத்துகின்றன.

பாவேந்தர் குடும்பத்தினர், தாங்கள் ஒருவர்தான் உண்மையோடு பாவேந்தர் கொள்கைகளைத் தமிழன்பர்களுக்கு எடுத்துச் சொல்வதை மறந்து, ஒருவகைக் காழ்ப்புணர்ச்சியில் என்னிடம் பேசியது உண்மையிலேயே என் மனத்தை ஊசி கொண்டு தைப்பது போல் உள்ளது. இருப்பினும், அந்த உணர்வுகளை மறந்து ஏதாகிலும் உண்மை உணர்வோடு தமிழ்த்தொண்டு செய்யமாட்டார்களா என்ற ஏக்கத்தோடு அவர்களிடம் பழகி வருகிறேன்.

தங்களின் இம்முறை புதுவை வருகையால் தமிழன்பர்களிடமிருந்த காழ்ப்புணர்வு விலகி ஒன்றுபட்டுச் செயல்பட்டு வருவதைக் கண்டு பெருமிதம் அடைகிறேன். தமிழ்த்தொண்டர் ஒன்றியத்தின் துவக்க விழாவின்போது தங்களின் கருத்துகள் ஒரு புதிய உணர்வளித்ததைக் கண்டு தமிழன்பர்கள் வியப்படைகிறார்கள்!

— து. அரிமாவளவன், புதுவை.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005, தமிழகம்.